




## ஒரு முக்கியமான முன்னுரை

ஒரு வார இதழில் வெளிவந்து கொண்டிருக்கும் என் தொடர் கதையின் இருபத்தி மூன்றாம் அத்தியாயத்தை மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தேன். ன் மனைவி, காலை நேர காபி தயாரிப்பில் இருந்தாள். நான் குடியிருக்கும் லைட் ஹவுஸ் வீதியில் இன்னமும் விடியற்காலையின் அரையிருட்டுத்தனம் உட்கார்ந்திருந்தது. எதிர்வீட்டு மாமியின் 'பெண்' சங்கீதம் கற்றுக் கொள்வதாய் நினைத்துக் காற்றையே இரண்டாய் அறுத்துக் கொண்டிருந்தாள். கோவையின் காலைக் குளிர் கொஞ்சம் உக்கிரமாய்த் தெரிய - மப்ளர் அணிந்த வயோதிகர்கள் இருமிக் கொண்டே வாக்கிங் போனார்கள்.

'மகேஸ்வரி அதிர்ச்சியில் உறைந்து போனாள்' என்ற வாக்கியத்துக்குக் கீழே (தொடரும்) போட்டுவிட்டு மனைவி தரும் காப்பிக்காகக் கை நீட்டிய போது -

வாசல் கதவை யாரோ தட்டினார்கள்.

''டொக்... டொக்...''

''தனா...! யார்ன்னு போய்ப் பாரு...''

அவள் யார் என்று போய்ப் பார்ப்பதற்குள் இரண்டு வாய் காப்பியை விழுங்கி விட்டு - 'அடுத்த பாக்கெட் நாவலை இப்போதே ஆரம்பிக்கலாமா...? சாயந்திரம் ஆபீஸ் முடிந்து வந்து ஆரம்பிக்கலாமா?' என்று யோசிக்கும் போதே - என் மனைவி உள்ளே வந்தாள்.

''என்னங்க...! அந்த காப்பி டம்ளரை அப்படி வெச்சுட்டுக் கொஞ்சம் வர்றீங்களா...?''

''யார் வந்திருக்காங்க...?''

''உங்க ஃப்ரெண்ட்ஸாம்...''

''என்னோட ப்ரெண்ட்ஸா...? நிச்சயமா இருக்காது... என்னோட ஃப்ரண்ட்ஸ் யாருமே இவ்வளவு சீக்கிரத்துல படுக்கையை விட்டு எந்திரிக்க மாட்டாங்களே...?''

''நீங்க அடிச்ச ஜோக்குக்கு நேரமிருக்கும் போது நீங்களே சாவகாசமா உட்கார்ந்து சிரிச்சுக்குங்க. இப்பப் போய் யார் வந்திருக்காங்கன்னு பாருங்க... நான் காப்பி கலந்து கொண்டு வர்றேன்...''

''காபி தரப் போறியா...?''

''ஆமா... ஏன்...?''

''இல்லே... வீட்டுக்கு எதிர்ல அமுதசுரபி ஹோட்டல் இருக்கு. அந்த ரெண்டு பேரையும் அங்கே கூட்டிட்டுப் போய் நல்ல காப்பியை வாங்கித் தரலாமேன்னு பார்த்தேன். பசங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்காது போலிருக்கு. 'ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்'னு இளங்கோ அடிகள் சும்மாவா சொன்னார்?

என் மனைவி உஷ்ண மூச்சோடு என்னைப் பார்க்க அந்த வெப்பம் தாளாமல் வரவேற்பறைக்கு வந்தேன்.

எனக்கு ஓரளவு பரிச்சயமான - அதிகத் தொடர்பில்லாத அந்த இரண்டு நண்பர்களும் என்னைப் பார்த்ததும் புன்னகைத்து - 'காலை வணக்கம்' சொல்லிக் கையைப் பற்றிக் குலுக்கினார்கள். 'என்னை ஞாபகமிருக்கா?

என்னை ஞாபகமிருக்கா?' என்று இரண்டு பேரும் கேட்டார்கள்.

இரண்டு பேருமே என்னோடு ராமகிருஷ்ணா வித்யாலயத்தில் படித்தவர்கள் என்று சட்டென்று மூளைக்கு உறைத்தது. ஆசிரியர் கல்லூரி மாணவர்கள்.

''நீ... மாணிக்கவேலு?'' என்றேன்.

''கரெக்ட்'' என்றான் அந்த அரை வழுக்கைத் தலையன். லாட மீசையோடு இருந்தவனைப் பார்த்து ''நீ... வேணுகோபால்?'' என்றேன்.

''நோ... நோ... நான் நந்தகோபால்...'' என்றான் அவன். ஒரு 'ஸாரி'யை உதிர்த்து விட்டு, 'என்ன விஷயம்?' என்று கேட்பதற்குள் என் மனைவி காப்பி டம்ளர்களோடு என்னை முறைத்துக் கொண்டே வந்தாள்.

நான் ''காப்பி எடுத்துக்குங்க...'' என்றேன்.

'வேண்டாம்... இப்பத்தான் சாப்பிட்டு வந்தோம்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் இரண்டு பேரும் ஆளுக்கொரு தேங்க்ஸை சொல்லிக் காப்பி டம்ளர்களை வாங்கிக் கொள்ள - நான் அவர்களை அனுதாபத்தோடு பார்த்தேன்.

கேட்டேன்:

''என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

மாணிக்கவேலு சொன்னான்: ''நாங்க ரெண்டு பேரும் குறிஞ்சி ஹையர் செகண்டரி ஸ்கூல்ல டீச்சர்ஸா இருக்கோம்.''

''இன்னிக்கு சாயந்தரம் அஞ்சு மணிக்கு எங்க ஸ்கூல்ல ஒரு பிரிவு உபச்சார விழா... காவ்யான்னு ஒரு டீச்சர் ரிடையராகிப் போறாங்க...''

''சரி...''

''அந்த விழாவில் நீ கலந்துகிட்டு ரெண்டு வார்த்தை அவங்களைப் பாராட்டிப் பேசணும். நீ இன்னிக்கு ஒரு ஃபேமஸ் ரைட்டர்.. அந்த காவ்யா டீச்சர் உன்னோட கதைகளை ரொம்பவும் விரும்பிப் படிப்பாங்க... உன்னோட ஃபேன்...''

''ரிடையராகிப் போற அளவுக்கு வயசாகியிருக்கிற அந்த அம்மா என்னோட விசிறியா...? ஆச்சர்யமாயிருக்கு...''

''உன்னைப் பார்க்கணும் பார்க்கணும்னு அந்த அம்மா சொல்லிட்டிருப்பாங்க. இன்னிக்கு அந்த அம்மா ரிடையராகிப் போற நாள். நீ வந்து அந்த விழாவில கலந்துகிட்டா... அந்த அம்மாவுக்கு ரொம்பவும் சந்தோஷமா இருக்கும்.''

நான் யோசித்தேன்.

''என்ன யோசிக்கிறே ராஜேஷ்?'' என்று கேட்டான் நந்தகோபால்.

''நீங்க சொல்ற காவ்யாவைப் பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாது. நான் எப்படி அவங்களைப் பத்தி விழாவில பாராட்டிப் பேச முடியும்...?''

''அவங்க ஒரு டீச்சர்... அந்த ஒரு தகுதி போதாதா, அவங்களைப் பாராட்டிப் பேச...? இதோ பார் ராஜேஷ்...! நீ எத்தனையோ கதைகளை எழுதியிருக்கலாம். உன்னோட கதைகள்ல வர்ற சம்பவங்கள் எவ்வளவோ பேரைத் திடுக்கிட பண்ணியிருக்கலாம். ஆனா, காவ்யா டீச்சரோட வாழ்க்கைல நடந்த சம்பவங்கள் ரொம்பவும் மோசமானவை. நடந்திருக்கக் கூடாதவை.''

என் எழுத்து உள்ளம் நிமிர்ந்து உட்கார்ந்தது.



மாணிக்கவேலு தொடர்ந்தான்:

''ஒரு மணி நேரம் நீ எங்களுக்கு ஒதுக்கித் தந்தா அந்த அம்மாவோட கதையைச் சொல்றோம். நீ கேக்கத் தயாரா...?''

''ம்... சொல்லு'' என்றேன்.

இரண்டு பேர்களும் மாறி மாறிச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஏறக்குறைய ஐம்பது நிமிடம்.

அவர்கள் காவ்யாவின் கதையைச் சொல்லி முடித்த போது... கதவோரம் நின்று கேட்டுக் கொண்டிருந்த என் மனைவியின் கண்களில் கண்ணீர் ததும்பி நின்று பளபளத்தது. என் மனசுக்குள் ஒரு கனம் பரவியிருந்தது.

''சாயந்தரம் கண்டிப்பா விழாவுக்கு வர்றேன்'' என்றேன்.

இருவரும் வாசலுக்குப் போய்... பைக்கை உதைத்துக் கொண்டிருந்த போது, நான் நாற்காலிக்கு வந்து 'தொப்பென்று' உட்கார்ந்தேன்.

பின்னாலேயே என் மனைவி வந்தாள்.

''பாவங்க... அந்த காவ்யா...'' என்றாள்.

''விழாவுக்குக் கூப்பிட வந்தாங்க. மனசைக் கனமாக்கிட்டுப் போயிட்டாங்க.''

''என்னங்க...!''

''உம்...''

''அந்த காவ்யாவோட கதையைப் 'பாக்கெட் நாவ'லுக்கு எழுதினா என்ன...? அந்த நாவலைப் படிக்கிற பெண்களுக்குக் காவ்யோவோட வாழ்க்கை ஒரு எச்சரிக்கையா இருக்குமே...!''

''என்னுடைய வாசகர்கள் 'க்ரைம் நாவ'லை எதிர்பார்ப்பவர்கள். சமூக நாவலை எழுதினா ஒத்துக்குவாங்களா...?''

''இந்தக் கதையைக் கண்டிப்பா ஒத்துக்குவாங்க.''

''திட்டி லெட்டர் வந்தா...?''

''கண்டிப்பா வராது!''

''நீ தர்ற கியாரண்டியில் 'பாக்கெட் நாவல்' தீபாவளி மலருக்கு இந்தக் கதையை எழுதப் போறேன்.''

''தலைப்பு என்ன வெய்க்கறீங்க?''

**''காவ்யாவின் கறுப்பு தினங்கள்''**

என் மனைவி புன்னகைத்தாள்.

நான் கேட்டேன்: ''ஏன் சிரிக்கிறே...?''

''கதை நல்லா எழுதறீங்களோ இல்லையோ... தலைப்பை மாத்திரம் நல்லா வெச்சுடறீங்க...''

என்னைத் தலைகுப்புற வாரி விட்டு - மிக்ஸியில் எதையோ அரைக்க உள்ளே போனாள். அவள் போனதும்-

நான் பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன். சிறிது நேரத்திற்கு முன்னால் மாணிக்கவேலுவும், நந்தகோபாலும் சொன்ன காவ்யாவைப் பற்றிய வார்த்தைகள் மூளைக்குள் ஊர்வலம் போக - அத்தியாய எண் ஒன்று என்று போட்டு விட்டு மளமளவென்று எழுத ஆரம்பித்தேன். ○



கூட்டம் அதிகமில்லாத சரவணம்பட்டி முருகன் கோவில்.

காலை ஏழு மணி.

மாலைகளை மடித்துக் கைகளில் போட்டுக் கொண்டு - சந்நிதியில் நின்றிருந்தார்கள் குணசேகரனும் இந்துவும். உள்ளேயிருந்து வந்த அர்ச்சகர் குணசேகரனிடம் கை நீட்டினார்; கேட்டார்:

''ஆபீஸ்ல பணத்தைக் கட்டி கல்யாணம் பண்ணிக்கிறதுக்கான ரசீதை வாங்கிட்டீங்களா...?''

''நேத்தைக்கே வாங்கிட்டோம்...''

''கல்யாணம்னு சொல்றீங்க... சொந்த ஜனத்தையே காணோமே!''

''நாங்க யார்க்கும் சொல்லலை...''

''வீட்டுக்குத் தெரியாமே நடக்கற கல்யாணமா?''

''வீட்ல சொல்லிட்டுத் தான் வந்திருக்கோம்... ரெண்டு வீட்ல இருக்கிற யாருக்குமே கல்யாணத்துக்கு வர இஷ்டமில்லை...''

''பின்னாடி போலீஸ் தொந்தரவு ஒண்ணும் வராதே...?'' அர்ச்சகர் சந்தேகமாய்க் கேட்க - குணசேகரன் புன்னகைத்தான்.

''அர்ச்சகரே! எனக்கு வயசு முப்பத்தி ரெண்டு. நான் கல்யாணம் பண்ணிக்கப் போற இந்தப் பொண்ணுக்கு வயசு இருபத்தைஞ்சு... ரெண்டு பேரும் ஒரே ஆபீஸில் தான் வேலை பார்க்கிறோம். எந்தப் பிரச்னையும் என்னிக்குமே வராது... இந்தாங்க மாங்கல்யம்... சாமி பேருக்கு அர்ச்சனை பண்ணி சீக்கிரமா குடுங்க... முகூர்த்த நேரம் தாண்டிடப் போகுது...''

மஞ்சள் தாளில் சுருட்டித் தந்த மாங்கல்யத்தை வாங்கிக் கொண்டு அர்ச்சகர் உள்ளே போக, குணசேகரன் தன் அருகே நின்றிருந்த இந்துவைப் பார்த்துச் சிரித்தான்.

''அர்ச்சகர் ரொம்பவும் பயப்படறார்...''

''எனக்கும் பயமாத்தாங்க இருக்கு...''

''எதுக்கு பயம்?''

''உங்க வீட்டை நினைச்சாத்தான்...''

''அந்தப் பயமே உனக்கு வேண்டாம்... இந்து... நான் இருக்கறப்போ யாரும் ஒண்ணும் சொல்லிட முடியாது...''

அர்ச்சகர் அர்ச்சனையை ஆரம்பித்திருந்தார். அவர் அர்ச்சனையை முடிப்பதற்குள் இந்துவைப் பற்றியும் குணசேகரனைப் பற்றியும் சொல்லி விடலாம்.

இந்துவுக்குக் கொஞ்சம் பூசின உடம்பு. மாநிறம். கொஞ்சமாய் சாகசம் தெரியும் கண்கள். சின்ன உதடுகளைப் பிரித்துச் சிரிக்கையில் -



மேல்வரிசையின் பொடிசு பொடிசான பற்களுக்கு மேல் ஒரு சிங்கப்பல் தெரிவது விசேஷம். அம்மா அப்பா இறந்த பிறகு சொந்தக்காரர்கள் யாரையும் நம்பாமல் - பேங்கில் போட்டு வைத்திருந்த டிபாசிட் பணத்தை உபயோகப்படுத்தி - படித்து ஒரு வேலையைத் தேடிக் கொண்டவள். குணசேகரனைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக நிறைய யோசித்தவள். மூன்று மாத காலமாய் யோசித்து - இன்றைக்கு இந்த நிமிஷம் பட்டுப் புடவை கட்டிக் கொண்டு குணசேகரனின் கையால் தாலியை வாங்கிக் கொள்வதற்காகக் காத்திருக்கிறாள்.

இனி குணசேகரன்!

1954ல் அவதரித்த குணசேகரனுக்கு வெள்ளரி விதை நிறம். ஒடிசலான தேகம். தன்னுடைய இருபத்தைந்தாவது வயதில் - இண்டர் டிஸ்ட்ரிக் ஆணழகன் போட்டியில் இரண்டாவது பரிசு வாங்கியவன் - இந்த முப்பத்திரண்டாவது வயதில் ஓணான் மாதிரி இருப்பதற்குக் காரணம் அவன் சிநேகிக்கும் விஸ்கிதான். தினசரி ஒரு குவார்ட்டர் விஸ்கி - அது எந்த பிராண்டாக இருந்தாலும் சரி, வயிற்றுக்குள் போக வேண்டும். இந்து டைப்ரைட்டிங் மெஷினைத் தட்டும் - அதே லாரன்ஸ் அண்ட் கோவில் சீப் - அக்கௌண்டண்ட். இவனைப் பற்றி இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். ஆனால் அதற்குள் அர்ச்சகர் அர்ச்சனையை முடித்து விட்டு - தேங்காயின் மேல் மாங்கல்யத்தை வைத்துக் கொண்டு வருகிறார்.

''நமஸ்காரம் பண்ணி... முருகனை நினைச்சு - மாங்கல்யத்தைக் கையில எடுத்துக்குங்க...''

குணசேகரன் எடுத்துக் கொண்டான்.

அர்ச்சகர் கோயில் மணியை - கயிற்றால் இழுக்க - அது 'டிங்டினார்' என்று எதிரொலித்து அடங்கியது. தன் கையிலிருந்த புஷ்ப அட்சதையை அவர்களின் தலைகள் மேல் தூவினார். ''மாங்கல்யத்தைப் பூட்டுங்க...''

குணசேகரன் தாலியை இந்துவின் கழுத்துக்குக் கொண்டு போனான். அவளுடைய உடம்பு லேசாய் சிலிர்ப்பது தெரிந்தது.

தாலியைக் கட்டினான்.

குணசேகரன் விட்ட உஷ்ணமான மூச்சு - அவளுடைய புறங்கழுத்தில் சுட்டது. அர்ச்சகர் கோயில் மணியை அடித்துக் கொண்டே சொன்னார்:

''மாலையை மாத்திக்குங்க...''

மாலைகளை மாற்றிக் கொண்டார்கள்.

குணசேகரன் அர்ச்சகர் கையில் ஐம்பது ரூபாய் நோட்டொன்றைத் திணித்து விட்டு - இந்துவோடு சந்நிதியை விட்டு வெளியே வந்தான். கழுத்தில் கனத்த மாலையைக் கழற்றி கையில் போட்டுக் கொண்டபடியே சொன்னான்:

''இந்து...! நான் உன்னோட கணவன்கிறதுக்கான லைசென்ஸை உன் கழுத்துல கட்டிட்டேன். இப்போ உனக்கு சந்தோஷந் தானே?''

''ம்...''

''இனிமே உன்னோட உடம்பைத் தொடலாம்...?''

''ம்...''

"இப்போ... நாம நேரா எங்கே போறோம் தெரியுமா இந்து?"

"எங்கே?"

"ஹோட்டல் இண்ட்டர் கான்டினென்டல் போறோம்..."

"போய்?"

"இதென்ன கேள்வி...? ரூம் எடுத்து சாயந்தரம் வரைக்கும் தங்கப் போறோம்..."

"வேண்டாங்க... மொதல்ல உங்க வீட்டுக்குப் போவோம்... அங்கே ரியாக்ஷன் எப்படியிருக்குன்னு பார்த்துக்குவோம்..."

"நீ ஏன் என்னோட - வீட்டைப் பத்தியே பயப்படறே இந்து? தைர்யமா இரு... இந்தக் கல்யாணத்தினாலே அங்கே எந்தப் பிரளயமும் நடந்துடாது..."

"எனக்கு நம்பிக்கையில்லை!"

"சரி... என்னோட வீட்டுக்கே மொதல்ல போவோம்... ஒரு அரைமணி நேரம் அங்கே இருப்போம்... அப்புறமா ஹோட்டலுக்குப் போவோம்... ஓ... கே...?"

"சரி...!"

கோயில் பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டு - இருவரும் வெளியே வந்தார்கள். அந்தக் காலை நேரத்தில் கோயிலில் கூட்டம் விரல் விட்டு எண்ணும் எண்ணிக்கையில் இருந்தது. ஓதுவார் ஒருவர் பிரகாரத் திண்ணையில் உட்கார்ந்து 'பித்தா பிறை சூடி...' என்று பாடிக் கொண்டிருக்க - அவர் கையிலிருந்த ஹார்மோனியப் பெட்டி - அவருடைய குரலுக்கு ஒத்துழைக்க மறுத்தது. மயில் ஒன்று சர்வ சுதந்திரமாய்க் கோயில் பூராவும் திரிந்து கொண்டிருந்தது.

கையில் வைத்திருந்த ரோஜாப்பூ மாலைகள் இதழ் இதழாய் உதிர - கீழே இறங்கினார்கள் குணசேகரனும் இந்துவும்.

பத்தே நிமிஷம்!

வெயிட்டிங்கில் இருந்த டாக்ஸி - இவர்களைப் பார்த்ததும் மெல்ல ஊர்ந்து வந்தது. டிரைவர் டாக்ஸியின் பின்சீட்டுக் கதவைத் திறந்து விட்டார். இருவரும் உள்ளே போனார்கள்.

"எங்கே ஸார் போகணும்?"

"பாரதியார் ரோடு"

டாக்ஸி கிளம்பியது. அடிவாரத்தில் வந்து நின்ற டூரிஸ்ட் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஒரு கூட்டம் - இவர்களை வேடிக்கை பார்க்க - இந்து தலைகுனிந்து கொண்டாள்.

டாக்ஸி வேகம் பிடித்து ரோட்டைத் தேய்க்க ஆரம்பித்தது. சரவணம் பட்டி கிராமமும், எஸ்ஸார்பி மில்லும் நிமிஷ நேரத்தில் காணாமல் போக - பிறகு வந்த ஐந்து நிமிஷங்களில் - டாக்ஸி காந்திபுரத்தைத் தொட்டு - பாரதியார் ரோட்டில் திரும்பியது.

"இன்னும் கொஞ்சம் முன்னாலே போகணும் டிரைவர்."



டிரைவர் போனார். இந்து தன் முகத்தில் துளிர்த்த வியர்வையை - இடது கையின் உள்ளங்கையில் அதக்கியிருந்த கர்ச்சீப்பால் அடிக்கடி ஒற்றிக் கொண்டாள்.

"என்னங்க?"

"சொல்லு... இந்து..."

"எம்... மனசு பூராவும் 'திக் திக்' ன்னு இருக்கு..."

குணசேகரன் புன்னகைத்தான். "மொதல்ல இந்த பயத்தை ஒழி... இந்து. சகஜமா இதை எடுத்துக்க... நீ நினைக்கிற மாதிரியெல்லாம் ஒண்ணும் ஆயிடாது..."

"நீங்க என்னதான் தைரியம் சொன்னாலும்... என்னால சகஜமா இருக்க முடியலைங்க... உங்க வீட்ல நிச்சயமா இந்த அதிர்ச்சியைத் தாங்கிக்க மாட்டாங்க..."

"நான் ஜாடைமாடையா சொல்லியிருக்கேன்... பயப்படாதே...!" குணசேகரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - டாக்ஸி டிரைவர் மறுபடியும் திரும்பிப் பார்த்துக் கேட்டார்:

"எந்த வீடு ஸார்?"

"அதோ... ரெண்டு தென்னை மரம் தெரியுதே... அந்த நீலநிற டிஸ்டெம்பர் அடிச்ச வீடு தான்... சரியா வாசலுக்கு முன்னாடி போய்க் காரை நிறுத்திக்க டிரைவர்..."

"சரி ஸார்..."

டாக்ஸி வேகத்தைக் குறைத்துக் கொண்டு - மிகச் சரியாய் அந்த வீட்டு வாசலுக்கு முன்னால் போய் நின்றது. வாசல் கேட் அருகே நின்று பல்லைத் தேய்த்துக் கொண்டிருந்த அந்த எட்டு வயதுச் சிறுவனும் - ஆறு வயது சிறுமியும் - டாக்ஸியிலிருந்து இறங்குகிற குணசேகரனைப் பார்த்ததும் - உற்சாகத்தோடு உள்ளே ஓடிய படி குரல் கொடுத்தார்கள்:

"அம்மா...! அப்பா... வந்தாச்சு...!"

இட்லி தட்டத்திலிருந்து - இட்லிகளை எடுத்துப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டிருந்த காவ்யா விருட்டென்று நிமிர்ந்தாள். இருபத்தேழு வயது அழகான காவ்யா.

"அம்மா...! அப்பா... கார்ல வந்திருக்கார்" மகள் சொல்ல முகம் மாறினாள்; எழுந்தாள். "காரா...?"

"ஆமாம்மா...!"

"நீயே வந்து பாரு..."

காவ்யா சமையலறையை விட்டு வெளியே வந்தாள். அவளுடைய நேர் பார்வைக்கு வாசலில் நின்றிருந்த டாக்ஸியும், சிரிப்போடும் - உடன் ஒரு பெண்ணோடும் - வந்து கொண்டிருந்த தன்னுடைய கணவன் கிடைக்க-அதிர்ந்து போனாள்.

வேக வேகமாய் வாசலுக்கு ஓடினாள்.

உதிர்கிற ரோஜா மாலையோடு வாசற்படி ஏறி உள்ளே வந்த குணசேகரன் காவ்யாவைப் பார்த்ததும் புன்னகைத்தான்:

''காவ்யா...! போய் ஆரத்தி கரைச்சுக் கொண்டா...''

''யார்ங்க... இந்தப் பொண்ணு?''

''பேரு... இந்து... என்னோட ஆபீஸ்ல வேலை செய்யற பொண்ணு. கொஞ்ச நாளாவே ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருந்தோம். இன்னிக்கு நல்ல முகூர்த்த நாள்ன்னு யாரோ சொன்னாங்க... அதான் ரெண்டு பேரும் சரவணம்பட்டி மலைக்குப் போய் முருகன் சன்னிதானத்துல கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டோம்... இன்னிக்குக் காலையில ஏழுமணியிலிருந்து இந்த இந்து உன்னோட தங்கச்சி...''

காவ்யா நெஞ்சில் கை வைத்து - ஏராள அதிர்ச்சிக்குப் போக - குழந்தைகள் இரண்டு பேரும் அவளுடைய இடுப்பை அணைத்துக் கொண்டார்கள்.

குணசேகரன் இந்துவின் பக்கமாய்த் திரும்பினான்:

''இந்து...! நீ உள்ளே போ...! காவ்யாவுக்கு இந்த அதிர்ச்சி தெளிய எப்படியும் ஒரு மணி நேரமாயிடும்... அது வரைக்கும் நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு...''

குணசேகரன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.



''ஒருநிமிஷம் நிக்கறீங்களா?'' என்றாள் காவ்யா. ஆத்திரம் முகத்தில் அலையடித்தது.

உள்ளே போய்க் கொண்டிருந்த குணசேகரனும் இந்துவும் சட்டென்று நிற்க - குணசேரகன் கேட்டான்: ''என்ன?'' - குரலில் வண்டி வண்டியாய் அலட்சியம்.

''இது உங்களுக்கே நல்லாயிருக்கா?''

''எது...?''

''நானும் உங்க குழந்தைகளும் உயிரோட இருக்கும் போதே - எவளையோ கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிக்கறீங்களே...? இந்த அநியாயத்தைச் சொல்றேன்...!''

''கல்யாணம் பண்ணிக்கிறது அநியாயமா...?'' கிண்டலாய்க் கேட்டவனை நிஷ்டூரமாய் முறைத்துப் பார்த்து விட்டு - குபீரென்ற பார்வையோடு இந்துவின் பக்கம் திரும்பினாள்:

''ஏற்கெனவே இவர் கல்யாணமானவர்ன்னு தெரிஞ்சுதான் உன்னோட கழுத்தை நீட்டினியா...?''

''ஆமா...!'' என்றாள், இந்து உதட்டுச் சுழிப்போடு.

''உனக்கே இது நியாயமா படுதா...? நீ கல்யாணம் பண்ணிக்க எம் புருஷன் தானா கிடைச்சார்...? இதைக் காட்டிலும் ரோட்டோரமா நின்னு வர்றவனை - போறவனை விபச்சாரத்துக்குக் கூப்பிடலாமே...!''



''ஏய்... காவ்யா...!''

குணசேகரன் சீறிக் கொண்டு வந்தான்: ''இப்ப வாயை மூடிக்கிட்டு உள்ளே ...கப் போறியா... இல்லையா...?''

''நான் உள்ளே போகணும்ன்னா... அவ வெளியே போகணும்...''

''அவ வெளியே போயிடுவா... ஒரு மணி நேரந்தான் இந்த வீட்ல இருக்கப் ...றா... அவளுக்காக ரத்தினபுரியில வீடு பார்த்து வெச்சிருக்கேன்... உன் ... அவ இருக்கப் போறதில்லை. போதுமா...? இந்து... நீ அந்த ரூமுக்குப் ...ய் ரெஸ்ட் எடு...''

இந்து உள்ளே போக -

காவ்யா அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''என்னடி பார்க்கிறே...?'' குணசேகரன் கேட்டான்.

''நான் இந்தக் கல்யாணத்தை ஒத்துக்க மாட்டேன்!''

''நீ என்னடி ஒத்துக்கிறது...? வாயை மூடிக்கிட்டு உள்ளே போய்க் ...ப்பியைக் கலந்து கிட்டு வா...! பத்து நிமிஷத்துல காப்பி வரணும்... ...ல்லேன்னா இடுப்பே முறிஞ்சு போற மாதிரி உதைப்பேன்...''

காவ்யா அவனுடைய பேச்சைப் பொருட்படுத்தாமல் குழந்தைகளை ...ழுத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள்.

''எங்கேடி போறே?''

''என்னோட அண்ணனோட வீட்டுக்குப் போய் அவரைக் கூட்டிட்டு வரப் ...போறேன்... நான் ஒண்ணும் அநாதையில்லை... சொந்தம்ன்னு சொல்லிக்க ...ன் கூடப் பொறந்த ரத்தம் ஒண்ணு இருக்கு... அவர் வந்து நியாயம் ...கேக்கட்டும்...''

''ஏய், நில்லுடி...!''

காவ்யா நிற்காமல் வாசற்படியைத் தாண்டினாள். எட்டு வயது ...ரேஷ்குமாரும், ஆறு வயது ரமாவும்... தாயின் சேலைத் தலைப்பைப் பற்றிக் ...கொண்டே பின் தொடர்ந்தார்கள்.

''போ... போய்த் தாராளமா உன்னோட அண்ணனைக் கூட்டிட்டு வா... உன்னோட அண்ணனை என்ன... ஊரையே கூட்டிட்டு வந்தாலும் ...சரிதான்...'' வாய்க்குள் முனகிக் கொண்டே - கதவோரமாய் நின்றிருந்த இந்துவின் பக்கமாய்த் திரும்பினான்:

''வா... உள்ளே போலாம் இந்து...''

இந்து முகம் வியர்த்திருந்தாள்.

''இப்படியெல்லாம் ஆகும்னு எனக்கு நல்லாவே தெரியும்ங்க... எதிர்பார்த்ததுதான். நான் இங்கே வரவேண்டாம்னு மொதல்ல நினைச்சேன்... ஆனாலும் மனசு கேக்கலை...''

''காவ்யாவோட சலசலப்பெல்லாம் கொஞ்ச நேரந்தான்... அப்புறம் அடங்கிடுவா. அவளைப்பத்தி எனக்கு நல்லாவே தெரியும்...''

''அவங்க அண்ணன் வீடு எங்கேயிருக்கு...?'' - இந்து கேட்டாள்.

''அருணா நகர்ல...''

''அவர் பேரு...?''

''சிவராமன்... கனரா பேங்க்ல அக்கௌண்டண்டா இருக்கார்... அப்பா - அம்மா இருந்த வரைக்கும் தங்கச்சி மேலே ஒட்டுதலா இருந்தார்... அதுக்கப்புறம் அவ்வளவு ஒட்டுதல் இல்லை... அவரைத்தான் கூப்பிடப்போயிருக்கா... அவர் வரட்டும். நல்லா நாலு கேள்வி நறுக்குன்னு கேட்டு அனுப்பி வெக்கிறேன்...'' என்று சொன்னவன் லேசாய் நடுங்கியபடி நின்றிருந்த இந்துவின் தோள் மேல் கையைப் போட்டான்.

''உள்ளே போலாம்... வா... இந்து... இதையும் உன் வீடு மாதிரி நினைச்சுக்கோ... போய்க் காப்பியைக் கலந்துட்டு வா... ரெண்டு பேரும் சாப்பிடலாம்...''

இந்து தயங்கிக் கொண்டே உள்ளே போனாள்.



**கா**வ்யாவையும் குழந்தைகளையும் அந்தக் காலை நேரத்தில் பார்த்து ஆச்சர்யப்பட்ட சிவராமனுக்கு நாற்பது வயதிருக்கும். சதைப் பிடிப்பான முகத்தில் மூக்குக் கண்ணாடி கறுப்பு பிரேமோடு எடுப்பாய்த் தெரிய - இரண்டு காதோர கிருதாவும் நரை வாங்கியிருந்தது. பேங்க்குக்குப் புறப்பட்டுப் போக - கால்களுக்கு பூட்ஸைக் கொடுத்துக் கொண்டிருந்தவர் - காவ்யாவைப் பார்த்ததும்:

''வா, காவ்யா...!'' என்று சொல்லிவிட்டு - வீட்டின் உள் பக்கமாய்த் திரும்பிப் பார்த்துக் குரல் கொடுத்தார்:

''அனுசூயா... யார் வந்திருக்கான்னு பார்த்தியா...?''

உள் அறையிலிருந்து வெளிப்பட்ட அனுசூயா - முகத்தில் எந்த ஆர்வத்தையும் காட்டாமல் வந்தாள். பேருக்குக் கொஞ்சம் முகத்தில் மலர்ச்சியைக் காட்டிவிட்டு ''என்ன காவ்யா நீ மட்டுந்தான் வந்தியா...? உன்னோட கணவர் வரலை...?'' என்று கேட்டாள்.

''வரலை அண்ணி...''

''ஏன் என்னவோ மாதிரி இருக்கே... அழுதியா...?''

அண்ணி அனுசூயா கேட்கக் கேட்க - காவ்யாவுக்கு அழுகை பீறிட்டது. அழுகையை சேலைத் தினிப்பால் தடுத்து ''அண்ணா'' என்று விசும்பினாள்.

''என்ன காவ்யா...?'' சிவராமன் திகைப்பாய்க் கேட்க, காவ்யா சொன்னாள்:

''அ... ண்... ணா... இவர் ரெண்டாவது கல்யாணத்தைப் பண்ணிட்டு வந்து நிக்கறாரண்ணா...''

சிவராமன் விருட்டென்று நிமிர்ந்தான்.

''நீ... என்னம்மா சொல்றே...?''

''ஆமாண்ணா... என்னிக்கும் இல்லாத அதிசயமா... அவர் நாலு மணிக்கு



...ரிக்கக் குளிச்சிட்டுப் - பட்டு வேஷ்டியும் சட்டுமா வெளியே கிளம்பிப் ...னார். நான் எங்கே போறீங்கன்னு கேட்டேன்... கல்யாணத்துக்குன்னு ...னார்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மாலையும் கழுத்துமா ஒரு ...ண்ணோட காரிலிருந்து இறங்கினார். கேட்டா 'கல்யாணம் ...ணிக்கிட்டேன்'னு சொல்றார்...''

அனுசூயா மாறிப் போன முகத்தோடு கேட்டாள்:

''யாரந்த பொண்ணு?''

''அவரோட ஆபீஸ்ல வேலை செய்யற பொண்ணாம்...''

''ரெண்டு குழந்தைகளைப் பெத்த மனுஷன், எதுக்காக ரெண்டாவது ...யாணம் பண்ணியிருக்கார்...? என்னங்க... புறப்படுங்க... அந்த ...ஷனைப் போய் நியாயம் கேட்டுட்டு வரலாம்...''

சிவராமனும் அனுசூயாவும் கிளம்பினார்கள். காவ்யா கண்ணீரோடு ...வர்களைப் பின் தொடர - சிவராமன் தெருமுனையிலிருந்த ஒரு ...க்ஸியை அமர்த்திக் கொண்டான்.

சரியாய் எட்டுமணி.

டாக்ஸி காவ்யாவின் வீட்டு வாசலில் நின்றது. சிவராமன் முதல் ஆளாய் ...றங்கி உள்ளே போக - பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான், ...ணசேகரன்.

''வாங்க சிவராமன்... உங்க தங்கச்சி வந்து விஷயத்தைச் சொல்லிட்டாளா...?''

''என்ன மாப்பிள்ளை... காவ்யா சொல்றது நிஜமா...?''

''சரியான நிஜம்...''

''காவ்யா உயிரோடத் தான் இருக்கா... செத்துப் போயிடலை... எதுக்காக ரெண்டாவது கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டீங்க...?''

''பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டேன்... பண்ணிக்கிட்டேன்...''

''ரெண்டாவது கல்யாணத்தை அவ்வளவு சுலபமா யாரும் பண்ணிக்க முடியாது குணசேகரன்! முதல் மனைவியோட சம்மதக் கடிதம் வேணும்...''

''சம்மதக் கடிதம் வேணுமா?''

''உம்...''

''கடிதம் இருக்கே...!''

''என்ன உளர்றீங்க...?''

''உங்க தங்கச்சி காவ்யா கையெழுத்துப் போட்டுக் கொடுத்த கடிதம் இருக்கே...''

குணசேகரன் சொல்ல - காவ்யா குறுக்கிட்டாள், ஆத்திரமாய்:

''அண்ணா! அவர் பொய் சொல்றார்... சொல்றதை நம்பாதே...! நான் என்னிக்குமே அந்த மாதிரியான சம்மதக் கடிதத்தைக் குடுக்கலை...''

குணசேகரன் உதடு பிரியாமல் சிரித்தான்:

''கையெழுத்துப் போட்டுக் குடுத்ததைக் காவ்யா மறந்துட்டா போலிருக்கு... நான் வேணுன்னா கடிதத்தைக் காட்டட்டுமா...?''

காவ்யா வெடித்தாள்:

''காட்டுங்க பார்க்கலாம்...?''

குணசேகரன் தன் சர்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - நான்காய் மடித்த அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினான்: ''படிச்சுப் பாருங்க சிவராமன்... நான் என்னிக்குமே பொய் சொல்ல மாட்டேன்...''

சிவராமன் அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்தான். தமிழ் டைப்ரைட்டர் மிஷின் எழுத்துக்களை கோர்த்திருக்க - வார்த்தைகள் ஓடியிருந்தன.

*'மனச்சுத்தியோடும் - தெளிவான சிந்தனை யோடும் நான் எழுதியிருக்கும் இந்தக் கடிதத்தின் வாசகங்கள் சத்தியமானவை. என்னால் என் கணவருக்கு ஒரு மனைவிக்குரிய கடமைகளைச் செய்ய முடியாததாலும் - என்னுடைய ஆரோக்கியம் சீர்கெட்டு விட்டதாலும் - என் கணவர் தான் விரும்பும் எந்தப் பெண்ணையும் இரண்டாந்தாரமாக மணந்து கொள்ள நான் மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன். இதில் என் கணவரின் நிர்ப்பந்தமோ வேறு யாருடைய நிர்ப்பந்தமோ கிடையாது என்று அறுதியிட்டுக் கூறிக் கொள்கிறேன்.*

*(ஒப்பம்) காவ்யா.*

கடிதத்தைப் படித்து முடித்திருந்த சிவராமன் இருட்டடித்துப் போன முகத்தோடு - அந்தக் கடிதத்தைக் காவ்யாவிடம் நீட்டினான்:

''என்னம்மா... இது...?''

கடிதத்தை வாங்கிப் பார்த்த காவ்யாவின் விழிகள் உச்சபட்ச விரிப்புக்குப் போயிற்று. கையெழுத்தைப் பார்த்தாள். அது அவளுடைய கையெழுத்துதான். சந்தேகமேயில்லை.

'எப்போது கையெழுத்துப் போட்டோம்?'

யோசிக்க - யோசிக்கவே - மூளை அந்த நாளை எடுத்துக் கொடுத்தது. சென்ற மாதம் யாரோ ஒரு ஃப்ரெண்டோடு சேர்ந்து - ஏதோ பிசினஸ் ஆரம்பிக்கப் போவதாகவும் - அந்த பிசினஸில் ஒரு பார்ட்னராய்க் காவ்யாவைப் போட்டிருப்பதாகவும் - அது சம்பந்தமான பார்ட்னர்ஷிப் டீட்களில் அவளுடைய கையெழுத்து வேண்டுமென்று சொல்லி - டைப் செய்யப்பட்ட சில காகிதங்களை நீட்டிக் காவ்யாவிடம் கையெழுத்துக் கேட்டதும் - அவள் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டதும் -

அண்ணி அனுசூயா மெல்ல நெருங்கி வந்து - காவ்யாவின் தோளைத் தொட்டாள். ''என்ன காவ்யா... நீ கையெழுத்துப் போட்டியா...?''

''அ... அ... அண்ணி... இது என்னை ஏமாத்தி வாங்கின கையெழுத்து...''

''நீ படிச்சுப் பார்க்காமே எப்படிக் கையெழுத்துப் போடலாம்?''

''ஏதோ பார்ட்னர்ஷிப் டீட்... பத்திரம்... அது இதுன்னு சொன்னார் அண்ணி. எனக்குப் பைத்தியம் பிடிச்சிருந்தாக் கூட நான் இந்த சம்மதக் கடிதத்துல கையெழுத்தைப் போட்டுக் குடுக்க மாட்டேன்... பேப்பரோடு பேப்பரா



வச்சு... என் கிட்டேயிருந்து கையெழுத்தை வாங்கியிருக்கார்...''

சிவராமன், குணசேகரனை ஏறிட்டான்:

''காவ்யாவை ஏமாத்தி இந்தக் கையெழுத்தை வாங்கியிருக்கீங்க, குணசேகரன்''

''நான் ஏமாத்தலை... உங்க தங்கச்சிக் கிட்டே இந்தக் கடிதத்தை வரிக்குவரி படிச்சுக் காட்டிட்டுத்தான் கையெழுத்தை வாங்கினேன்... அவ மறந்துட்டா போலிருக்கு...''

''அண்ணா...! இவர் பொய் சொல்றார்... இந்தக் கையெழுத்து என்னை ஏமாத்தி வாங்கின கையெழுத்து!''

குணசேகரன் சிரித்தான்:

''சரி அப்படித்தான் இருக்கட்டுமே...! நீ இப்போ என்ன பண்ணப் போறே? கோர்ட்டுக்குப் போகப் போறியா...?''

''நான் போலீஸுக்குப் போகப் போறேன்...''

''போயி...?''

''உங்க ரெண்டாவது கல்யாணத்தைப் பத்தி சொல்லப் போறேன்'' - சொல்லி விட்டுத் தன் இரண்டு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வெளியே வந்தாள், காவ்யா. அவளைத் தொடர்ந்து சிவராமனும் அனுசூயாவும் வந்தார்கள். வாசற்படியைத் தாண்டி வீதியில் கால் வைத்தபோது - அனுசூயா தன் கணவனின் தோளைத் தட்டினாள்: ''என்னங்க...!''

''ம்''

''உங்க தங்கச்சியைப் போலீஸுக்கெல்லாம் போக வேண்டாம்னு சொல்லிடுங்க...''

''ஏன்...?''

''போலீஸுக்குப் போனா பேப்பர்காரனுக்கு நியூஸ் போயிடும்... பேப்பர்ல வந்தா ஊர் பூராவும் விஷயம் பரவிடும். அப்புறம் நீங்களும் நானும் மத்தவங்க கேட்கிற கேள்விகளுக்குத் தலையைக் குனிஞ்சுட்டு நிக்கணும்...''

''இப்போ என்ன செய்யச் சொல்றே?''

''எப்படியோ கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டார்... உங்க தங்கச்சியை ஏமாத்தி சம்மதக் கடிதத்தையும் வாங்கியிருக்கார்... போலீஸ்ல போய்க் கம்ப்ளய்ண்ட் பண்ணினாலும் இவங்களாலே சட்டப்படி எதுவும் பண்ண முடியாது... பேசாமே அவருக்கு அடங்கிப் போயிடறது நல்லது.''

குழந்தைகளை இழுத்துக்கொண்டு - முன்னால் போய்க் கொண்டிருந்த காவ்யா, அனுசூயாவின் பேச்சைக் கேட்டதும் சட்டென்று நின்றாள். தலைமுடி சிலும்பத் திரும்பினாள்:

''என்ன அண்ணி சொன்னீங்க...?''

''இதோ பார் காவ்யா...! நீ கோபப்படறதிலேயும் - ஆத்திரப்படறதிலேயும் கொஞ்சம் கூட சென்ஸே இல்லை... ஆயிரம்தான் அக்கிரமம் பண்ணினாலும் எப்படியோ கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு அவர்தான் உனக்குப் புருஷன்... 

வந்துட்டார்... நீ தான் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிப் போகனும்..."

"அண்ணி...!" அதிர்ந்து போய் அனுசூயாவையே பார்த்தாள் காவ்யா. அனுசூயா தொடர்ந்து சொன்னாள். "ஆம்பிளைங்க... எப்பவுமே... அப்படித்தான்... கொஞ்சம் முன்னே பின்னேதான் இருப்பாங்க..."

"அண்ணி! நான் ஒரு கேள்வி கேட்டா... நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே!"

"என்ன...?"

"என்னோட அண்ணன் இப்படியொரு காரியம் பண்ணிட்டு வந்திருந்தா... நீங்க என்ன பண்ணியிருப்பீங்க...? அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போயிருப்பீங்களா?"

அனுசூயா முகம் சிவந்தாள். தெருவென்றும் பார்க்காமல் கத்தினாள்:

"காவ்யா...!"

"எங்கண்ணன் அப்படி பண்ணமாட்டார்... எனக்கு நல்லாத் தெரியும்... இருந்தாலும் ஒரு பேச்சுக்காக சொன்னதையே உங்களாலே தாங்கிக்க முடியலையே அண்ணி... என்னோட நிலைமையைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க... தாலியை வாங்கிக்கிட்ட நாள் முதலா... அந்த மனுஷன்கிட்டே எனக்கு சந்தோஷமில்லை... பகல் நேரங்கள்ல பாதி மனுஷனா இருப்பார்... ராத்திரி நேரங்கள்ல மிருகமாயிடுவார்... என் உடம்புல அவர் கால் படாத நாளில்லை... அவர் என்னாதான் என்னை அடிச்சாலும் உதைச்சாலும் எம் புருஷன்ங்கிற நினைப்பு எனக்கு இருந்தது. இந்த நினைப்பிலேயும் மண் விழுந்துருச்சு... நான் அவரைச் சும்மா விடப் போறதில்லை..."

"பைத்தியம் மாதிரி பேசாதே காவ்யா...! மொதல்ல குழந்தைகளைக் கூட்டிக்கிட்டு வீட்டுக்குப்போ... பின்னாடி பேசிக்கலாம்..."

"நான் அந்த வீட்டுக்குப் போக மாட்டேன்..."

"பிடிவாதம் பிடிக்காம... போம்மா..."

"ஊ... ஹு... ம்... என்னோட பிணம் கூட அந்த வீட்டு வாசற்படி ஏறக்கூடாது. இந்த நிமிஷத்திலிருந்து அவர் மூஞ்சியில நான் முழிக்கப் போறதில்லை..."

அனுசூயா ஆத்திரமானாள்.

"காவ்யா! நீ புரிஞ்சுதான் பேசறியா... புரியாம பேசறியான்னு எனக்குத் தெரியலை... நடந்து போனதைப் பெரிசு படுத்தாமே வீட்டுக்குப்போ... ரெண்டு நாள்ல சரியாயிடும்..."

"எப்படி சரியாகும்...? அண்ணி! நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். நான் பார்க்கிற டீச்சர் உத்தியோகம் எனக்கும் என்னோட ரெண்டு குழந்தைகளுக்கும் சோறு போடும்... நூறு ரூபாய் வாடகையில... ஒரு வீட்டைப் பார்த்துக்கிட்டு - புருஷன் என்கிற ஆம்பிளை ஜென்மம் இல்லாமலேயே குடும்பத்தை நான் நடத்தறேன்... நான் குழந்தைகளைக் கூட்டிக்கிட்டு - உங்க வீட்டுக்கு வந்திருவேனோன்னு நீங்களோ, அண்ணனோ கொஞ்சம் கூட பயப்படாதீங்க அண்ணி... நான்



மாட்டேன்..."

சிவராமன் குறுக்கிட்டான்:

"காவ்யா...! நீ பேசறது கொஞ்சம் கூட சரியில்லே... உன்னாலே எப்படித் தனியா இருக்க முடியும்...?"

"ஏண்ணா இருக்க முடியாது? தாராளமா இருக்கலாம்... நான் இருந்து காட்டறேன்... உங்க கௌரவமும் மானமும் பாதிக்கப்படும்ன்னு சொன்னதினாலே நான் போலீஸுக்குப் போக மாட்டேன்... அவருக்குப் பிடிச்ச அவளோட அவர் குடும்பத்தை நடத்தட்டும்... நான் தனியா என் குழந்தைகளோட இருந்துடறேன்..."

- என்று சொன்ன காவ்யா, தன் குழந்தைகளோடு நகர்ந்தாள்.

"காவ்யா...! நீ இப்போ எங்கே போறே?"

"அடுத்த தெருவுல புரோக்கர் ஒருத்தர் இருக்கார்... நூறு ரூபாய் வாடகையில் வீடு வேணும்ன்னு சொன்னா... சாயந்தரத்துக்குள்ளே வீட்டைப் பிடிச்சுக் குடுத்துருவார்..."

குழந்தைகளை இழுத்துக் கொண்டு விறுவிறுவென்று நடந்து போகும் காவ்யாவையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தார்கள் சிவராமனும் அனுசூயாவும்.

"இருந்தாலும் உங்க தங்கச்சிக்கு ரொம்பவும் திமிர்..."

"நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் ரெண்டு மூணு மாசம் வெச்சிருந்து பார்க்கலாமா... அனுசூயா...?"

"வாயை மூடிக்கிட்டு - ஆட்டோ கிடைக்குதான்னு பாருங்க... வீடு போய்ச் சேரலாம்... பசி வயித்தைக் கிள்ளுது..."

குழந்தைகளோடு - தொலைவில் நடந்து போகும் காவ்யாவைப் பார்த்தபடியே - ஆட்டோவைத் தேடினான் சிவராமன். வயிற்றுக்குள் பாதரசம் நிரம்பி விட்ட மாதிரி - கவலை கனத்தது.




மூன்றாவது அத்தியாயத்திற்கும் - நான்காவது அத்தியாயத்திற்கும் மத்தியில் ஆறு மாதம் ஓடியிருந்தது. காந்தி பார்க்குக்குப் பக்கத்தில் சலிவன் வீதியில் - நூத்தி ஐம்பது ரூபாய் வாடகையில் - ஓடு சரிந்து - மழை வந்தால் ஏராளமாய் ஒழுகுகிற - அந்த வீட்டில் காவ்யா நாட்களைத் துரத்திக் கொண்டிருந்தாள். பையன் வீரேஷ்குமாரையும் - பெண் ரமாவையும் பக்கத்திலிருந்த பள்ளிகளில் சேர்த்திருந்தாள். காலை எட்டு மணிக்கெல்லாம் சமையலை முடித்து - டிபன் பாக்ஸ்களில் அடைத்து - குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பிவிட்டு - தானும் சாப்பிட்டு - பள்ளிக்குக் கிளம்பி - சாயந்தரம் ஐந்து மணிக்கு ஏழாம் நெம்பர் பஸ்ஸைப் பிடித்து வீடு வந்து சேர்கையில் - வீட்டு வாசற்படிகளில்

சோர்வோடு உட்கார்ந்தபடி காத்துக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்க்கும் போது அவள் மனம் நைந்து போகும்.

அன்றைக்குக் காலை.

பள்ளிக்கு - வழக்கம் போல் குழந்தைகளை அனுப்பிவிட்டு - தான் சாப்பிட உட்கார்ந்த போது வாசலில் நிழலாடியது. நிமிர்ந்தாள்.

சிவராமன் நின்றிருந்தான்.

''வாண்ணா!''

அவன் உள்ளே வந்தான். ஸ்டூலை எடுத்துப் போட்டதும் அவன் உட்கார்ந்தான். காவ்யா கேட்டாள்: ''காப்பி கலக்கட்டுமா...?''

''வேண்டாம்மா... இப்பத்தான் சாப்ட்டுட்டு வர்றேன்...''

''அண்ணி சௌக்யமா...?''

''ம்...''

''சரி... நீ ஏண்ணா ஒரு மாதிரி இருக்கே...?''

''நான் கேள்விப்பட்டது உண்மையா காவ்யா?''

''என்ன கேள்விப்பட்டே...?''

''உம் புருஷன்கிட்டேயிருந்து விவாகரத்துக் கோரியிருக்கியாமே?''

''ஆமா...!''

''ஏன் காவ்யா... இப்படியெல்லாம் நடந்துக்கறே...? உன்னோட கணவர் என்னிக்குமே இப்படியே இருந்துட மாட்டார். நாளைக்கு மனசு திருந்தி உன்கிட்டே திரும்பி வரலாமில்லையா?''

''என்ன பிரயோஜனம்...?''

''காவ்யா...?''

''அவர்க்கு தன்னோட அறுபதாவது வயசுல தான் செஞ்சதெல்லாம் தப்புங்கிற ஒரு ஞானோதயம் வரும். அந்த வயசுல அவர் என்னைத் தேடிட்டுவர்றப்போ எனக்கு அம்பது வயசு ஆகியிருக்கும்! சாக வேண்டிய அந்த வயசுல வாழணும்ங்கிற ஆசை எப்படி வரும்...?''

சிவராமன் ஒன்றும் பேசத் தோன்றாமல் உட்கார்ந்துவிட்டு எழுந்தான். ''ஒரு நாளைக்கு குழந்தைகளைக் கூட்டிக்கிட்டு என்னோட வீட்டுக்கு வா காவ்யா...''

''வேண்டாண்ணா...!''

''ஏன்... அப்படிச் சொல்றே?''

காவ்யா புன்னகைத்தாள்: ''நீயும் மனப் பூர்வமா கூப்பிட்ட மாதிரி எனக்குத் தோணலை. தங்கச்சியைப் பார்க்க வந்துட்டோமே பேருக்காவது கூப்பிடணுமேன்னு கூப்பிட்டீங்க... நான் உன் வீட்டுக்கு என் குழந்தைகளோடு வந்தா, அண்ணிக்கு வயத்துல பகீர்ன்னு ஆயிடும்ண்ணா. நான் இங்கே மூணு வேளையும் குழந்தைகளோடு சாப்பிட்டுகிட்டு சந்தோஷமாத்தான் இருக்கேன்...''



''பணம் ஏதாவது தேவைப்பட்டா கேள் காவ்யா...''

''அதுக்கு அவசியமே வராதுண்ணா...'' புன்னகையோடு சொன்ன காவ்யாவையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு - ''நான் வர்றேன்'' என்றபடி நகர்ந்தான் சிவராமன்.

''அடுத்த தடவை வரும்போது அண்ணியைக் கூட்டிக்கிட்டு வாண்ணா''

''ம்... ம்...''

சிவராமன் வாசலுக்குப் போய் - தன் ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டிருந்த போது - காவ்யா சாப்பிட ஆரம்பித்து - ஐந்து நிமிஷத்தில் முடித்து - தயிர் கலந்த சாப்பாட்டை எடுத்து டிபன் பாக்ஸில் அடைத்துக் கொண்டு எழுந்தாள். வலைக் கூடையில் டிபன் பாக்ஸையும் - குடையையும் எடுத்து வைத்தவள் வாசலில் மறுபடியும் நிழலாடுவதை உணர்ந்ததும் தலையை உயர்த்தினாள்.

வீட்டுக்கார நாயுடு நின்றிருந்தார். வழுக்கை சரிந்த நெற்றிக்குக் கீழே சிவப்பான சின்னக் கண்கள். நரைக் கொத்து மீசைக்குக் கீழே - வெற்றிலைக் காவி பற்களில் சிரித்தார். ''என்னம்மா... ஸ்கூலுக்குப் புறப்பட்டுட்டியா...?''

''ம்...'' கிழட்டு நாயுடுவின் சின்னத்தனமான பார்வை தன் மார்புகள் மீது படுவதை உணர்ந்த காவ்யா சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டாள்.

''குழந்தைங்க ரெண்டு பேரும் ஸ்கூலுக்குப் போயிட்டாங்க போலிருக்கு...''

''ம்...''

''இப்போ... யாரோ வந்துட்டுப் போனாங்களே, அது யாரும்மா...?''

''என்னோட அண்ணன்...''

''உனக்கு அண்ணன் இருக்காரா...? இங்கே குடி வரும்போது நீ சொல்லவேயில்லையே...!'' நாயுடு ஆச்சர்யப்பட்டார்.

''வேணும்ன்னு தான் சொல்லலை...''

''அண்ணன் என்ன பண்றார்?''

''வேலைக்குப் போறார்... கனரா பாங்க்ல அக்கௌண்டன்ட்...''

''வசதியாத்தான் இருக்கார்...''

''எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு... நாயுடு ஸார்...'' மேஜை மேலிருந்த பூட்டையும் சாவியையும் எடுத்துக் கொண்டாள், காவ்யா.

நாயுடு ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே உட்கார்ந்திருந்த ஸ்டூலை விட்டு எழுந்தார்: ''வீடு வசதியாத்தானே இருக்கு...''

''ம்...''

''கூரை ஒழுகிறதா சொன்னியே...! வேய்ஞ்சுடலாமா?''

''ம்...''

''அடுத்த வாரம் கொத்தனாரை வரச் சொல்லியிருக்கேன்... இந்தத் தரைப்

பரப்பு பூராவையும் கொத்தி சிமெண்ட் போட்டுடலாம்ன்னு பார்க்கிறேன்...''

''ம்...''

''இந்த வசதியையெல்லாம் செஞ்சித்தர்றேன்ங்கிற காரணத்துக்காக வாடகையைக் கூட்டமாட்டேன். அதே நூத்தி அம்பது ரூபா தான்...''

''தேங்க்ஸ்... நாயுடு ஸார்...'' - கதவைச் சாத்தி வீட்டைப் பூட்டினாள் காவ்யா. வலைக் கூடையில் இருந்த குடையை எடுத்து தலைக்கு மேல் விரித்துக் கொண்டாள். நாயுடு பின்னாலேயே வந்தார்.

''அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்மா...''

''என்ன...?''

''நேத்தைக்கு பஜார்ல உம்புருஷனைப் பார்த்தேன்...''

''அவரை எப்படி உங்களுக்குத் தெரியும்...?''

''புரோக்கர் தான் காட்டினான்.''

''சரி... நாயுடு ஸார்... வெட்டி விஷயம் பேசிட்டிருக்க நேரமில்லை. எனக்கு பஸ்வர்ற நேரமாச்சு...'' சொல்லிக் கொண்டே வேகவேகமாய்த் தெருவுக்கு வந்தாள் காவ்யா. தெருமுனை பஸ்டாப்பில் - அவள் போக வேண்டிய பஸ் காத்திருக்க 'ச்சப்... ச்சப்' என்று ஸ்லிப்பர்கள் சப்திக்க பஸ்ஸைப் பிடிக்க ஓடினாள் காவ்யா. பஸ் புறப்பட்டுப் போய்விடப் போகிறதே என்கிற பதைபதைப்பில் அவசர ஓட்டம் ஓடினாள். காலை நேர நெரிசலில் புகுந்து - புகுந்து ஓடியவள் - பஸ்ஸுக்கு வெகு சமீபமாய் நெருங்கின விநாடி - வலதுகால் பெருவிரலை சேலை - தட்டி விட - கையிலிருந்த வலைக் கூடையும் - குடையும் திசைக்கொன்றாய்ச் சிதற மல்லாந்தாள்.

''ம்... மா... ஆ...!''

தெருவோரமாய்ப் போய்க் கொண்டிருந்தவர்கள் அந்த நிமிஷம் தங்களுடைய கவலைகளை மறந்து போய்க் காவ்யாவிடம் ஓடி வந்தார்கள்.

காவ்யாவின் பின்னந்தலை 'நெக்' கென்று தார் ரோட்டின் கடினப் பரப்பில் இடித்துக் கொண்டதில் ரத்தம் வாங்கிக் கொசகொசத்தது. கண்களுக்குள் கறுப்பு மேகங்கள் நகர - ஒரு தற்காலிக மயக்கத்துக்குப் போனாள்.




**கா**வ்யாவுக்கு மறுபடியும் ஞாபகம் வந்த போது - தான் ஒரு கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தாள். தலைக்காயம் மின்சாரம் பாய்ந்த மாதிரி இழுத்துப் பிடிக்க - வலது கையைத் தூக்கித் தொட்டுப் பார்த்தாள். கனமான பாண்டேஜ் கைக்கு மெத்தென்று சிக்கியது.

''உங்களைச் சிரமப்படுத்திக்க வேண்டாம்... அப்படியே படுங்க...'' குரல் கேட்டுக் கண்களை உயர்த்தினாள் காவ்யா.

எதிரே அந்த இளைஞன் நின்றிருந்தான். முப்பத்தைந்து வயது



மதிப்பீட்டில் - கண்ணாடி அணிந்து - கொஞ்சம் பணக்காரத்தனமாய் தெரிந்தான். சுருண்ட தலைமுடியை வலது பக்கமாய் ஏற்றிச் சீவியிருந்தான்.

''நீ... நீங்க...?''

காவ்யா கொஞ்சம் பதட்டமாய் எழுந்து உட்கார்ந்தாள். அவன் சிரித்தான். பல்வரிசை கோர்த்த மாதிரி இருந்தது. ''பயப்படாதீங்க...! நீங்க பத்திரமான இடத்துலதான் இருக்கீங்க... எம்பேரு கௌரிசங்கர்... இது என்னோட வீடு தான்... நீங்க ரோட்ல மயங்கி விழுந்ததும் - அந்தப் பக்கமா கார்ல வந்த நான், உங்களைக் கார்ல எடுத்துப் போட்டுக்கிட்டு - வீட்டுக்குக் கொண்டுட்டு வந்தேன். என் ஃபேமிலி டாக்டர் இப்பத்தான் வந்துட்டுப் போறார். கீழே விழுந்ததுல தலைல மட்டும் அடிபட்டிருக்கு... பயப்பட ஒண்ணுமேயில்லை... உங்க வீட்டு அட்ரஸைச் சொன்னீங்கன்னா... கார்லேயே வீட்ல கொண்டு போய் விட்டுடறேன்...''

அந்த கௌரிசங்கர் சொல்லச் சொல்ல - காவ்யா பதட்டமாகி தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள்.

மணி பத்து ஐந்து.

கௌரிசங்கர் கேட்டான்:

''நீங்க ஆபீஸ் போறீங்களா?''

''இல்லே... ஸ்கூல்ல டீச்சரா இருக்கேன்...'' மெல்லிய குரலில் சொன்னாள்.

''எந்த ஸ்கூல்...?''

''லிட்டில் பிளவர் ஸ்கூல்''

''புளிய குளம் அந்தோணியார் கோயிலுக்குப் பக்கத்துல இருக்கே... அந்த ஸ்கூலா...?''

''ஆமா...!'' தலையாட்டினாள் காவ்யா.

''அந்த ஸ்கூலுக்கு டெலிபோன் இருக்கா...?''

''இருக்கு...''

''நெம்பரைச் சொல்லுங்க... நான் ஹெச்.எம்.முக்கு போன் பண்ணி மெஸேஜை கன்வே பண்ணிடறேன்... நீங்க எப்படியும் ஒரு வாரம் லீவு எடுக்க வேண்டியிருக்கும்.''

ஸ்கூல் டெலிபோன் நெம்பரைச் சொன்னாள் காவ்யா... கௌரிசங்கர் அதை மனசில் வாங்கிக் கொண்டு நகர்ந்தான். ஐந்தடி நகர்ந்தவன் நின்றான்.

''உங்க பேரு...?''

''காவ்யா... 'மாத்ஸ் டீச்சர் காவ்யா'ன்னு சொல்லுங்க...''

அவன் பக்கத்து அறைக்குப் போய் - டெலிபோன் டயலைச் சுழற்றிக் கொண்டிருந்த போது - காவ்யா தன் கண்களைச் சுழற்றிப் பார்வையை அறை பூராவும் அலைய விட்டாள்.

நான்கு பக்கமும் மார்பிள் ஸ்டோன் பதிக்கப் பெற்ற சுவர்கள். நடுவே வா... பிக்சரில் அருவியொன்று பாலாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. சிவ... வெல்வெட் வேய்ந்த நான்நகைந்து நாற்காலிகள் ஒரு வட்டம் போட்...

தெரிய - பெல் டெக் டி.வி.யும், பஜாஜ் ஃப்ரிஜ்ஜும் சுவரோரமாய் நின்றிருந்தன. எங்கோ பக்கத்து அறையிலிருந்து - சிதாரின் இழையும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

காவ்யா எழுந்து உட்கார்ந்து - அறையை பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே - கௌரிசங்கர் மறுபடியும் அறைக்குள் நுழைந்தான்.

''போன் பண்ணிச் சொல்லிட்டேன் மிஸஸ் காவ்யா...''

''தாங்க்யூ...''

''அடுத்தபடியா... உங்க கணவர்க்கு விஷயத்தைச் சொல்ல வேண்டாமா...? அவர் எங்கே வேலை பார்க்கிறார்? அவரோட போன் நெம்பரைத் தர்றீங்களா...?''

''ஸாரி... அவருக்கு இந்த விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டாம்...'' காவ்யா சொல்ல - கௌரிசங்கர் முகத்தில் குழப்பம் வாங்கினான்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க...?''

''அவரும் நானும் கூடிய சீக்கிரத்துல டைவோர்ஸ் வாங்கிக்கப் போறோம்... இந்த நிமிஷமும் கூட ரெண்டு பேரும் பிரிஞ்சுதான் வாழ்ந்திட்டிருக்கோம்...''

கௌரிசங்கர் திடுக்கிட்டுப் போயிருந்தான். சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு மெல்லிய குரலில் கூப்பிட்டான்:

''மிஸஸ் காவ்யா...!''

''ம்...''

''ரெண்டு பேரும் எதனால டைவோர்ஸ் வாங்கிக்கப் போறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' கௌரிசங்கர் கேட்ட கேள்விக்குத் தன் கைவிரல் நகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் காவ்யா.

''உங்களுக்கு இஷ்டமில்லேன்னா சொல்ல வேண்டாம்...''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை...''

''பின்னே, சொல்லலாமே...?''

''நான் உயிரோடு இருக்கும் போதே... எனக்குத் துரோகம் பண்ணிட்டு என்னோட கணவர் இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்... அந்த ஆத்திரத்துல தான் டைவோர்ஸ் கேட்டிருக்கேன்... இன்னும் ரெண்டு மாசத்தில் தீர்ப்பாயிடும்...''

''உங்களுக்குக் கல்யாணமாகி எத்தனை வருஷம் இருக்கும்?''

''பத்து வருஷம்...''

''குழந்தைகள்?''

''இருக்காங்க... ஒரு பையன்... ஒரு பொண்ணு...''

''அவங்க ரெண்டு பேரும் உங்கக்கிட்டே இருக்காங்களா...? இல்லே அவர்கிட்டே இருக்காங்களா...?''

''என்கிட்டத்தான் இருக்காங்க...''

''குழந்தைகளுக்கு என்ன வயசு...?''

''பையனுக்கு எட்டு வயசு... பொண்ணுக்கு ஆறு வயசு...''

''ரெண்டு குழந்தைகளுக்கு அப்பாவான அவர் எப்படி மனசு துணிஞ்சு ரெண்டாவது கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டார்...?''

''கொழுப்பு தான்...''

காவ்யா சொல்ல - கௌரிசங்கர் சிரித்தான்.

''நீங்க அவர் மேலே ரொம்பவும் கோபமாயிருக்கீங்க!''

''வெறும் கோபம் மட்டுமில்லை மிஸ்டர் கௌரி சங்கர்... என் உடம்பு ராவும் அவர் செஞ்ச துரோகத்தில் அக்கினி குண்டம் மாதிரி ரிஞ்சுட்டிருக்கு... இன்னிக்குத்தான் நீங்க எனக்கு அறிமுகமாயிருக்கீங்க... டுரோட்டில விழுந்து மயக்கமான என்னை வீட்டுக்குக் கொண்டு ந்துட்ரீட்மெண்ட் குடுத்திருக்கீங்க... உங்க மனசைக் கனமாக்கிற அளவுக்கு ன்னோட வாழ்க்கையில் பல சம்பவங்கள் நடந்திருக்கு... நான் அதையெல்லாம் உங்ககிட்டே சொல்ல விரும்பலை...''

''சரி. நீங்க சொல்ல வேண்டாம்... ரெஸ்ட் எடுங்க...''

''நோ... நோ... ரெஸ்ட் எடுக்கிற அளவுக்கு என்னோட உடம்புக்கு ஒண்ணும் கிடையாது. நான் வீட்டுக்குக் கிளம்பறேன்...''

''வாங்க... நானே வீட்ல கொண்டு போய் ட்ராப் பண்றேன்...''

''உங்களுக்கு சிரமம்...''

''நான் சிரமமா அதை நினைக்கலை...''

''உங்களைப் பத்தி நீங்க ஒண்ணுமே சொல்லலையே... மிஸ்டர் கௌரி ங்கர்...?''

''நீங்க என்னைப்பத்தி ஒண்ணும் கேக்கலையே...!''

''இப்போ கேக்கலாமா...?''

''தாராளமா...''

''இந்த வீடு எந்த ஏரியாவில இருக்கு...?''

''சாயிபாபா காலனி எக்ஸ்டென்ஷன்ல...''

''இந்த வீட்ல நீங்க மட்டுந்தான் இருக்கீங்களா...?''

''நானும் என்னோட பத்து வயது டாட்டரும் இருக்கோம்...''

''உங்க மனைவி...?''

''போன வருஷம் செப்டம்பர் மாசம் பத்தாம் தேதி ஒரு ரோடு ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போயிட்டா.''

கௌரிசங்கர் ஒரு கசப்பான புன்னகையோடு சொன்னதும் - முகம் பூராவு திடுக்கிடலை வாங்கிக் - கண்களை விரித்தாள் காவ்யா.

''உங்க மனைவி செத்துட்டாங்களா...?''

''நீங்க இதை எதிர்பார்க்கலை... இல்லையா மிஸஸ் காவ்யா?''

''நிச்சயமா எதிர்பார்க்கலை...''

''அதிர்ச்சியோடு அதிர்ச்சியாய்... இன்னொரு நியூ

சொல்லிடறேன்...''

''என்ன...?''

''என்னோட பத்து வயது டாட்டர் ஜமுனாவுக்குப் போலியோ அட்டாக்... அஞ்சு வருஷமா அவளுக்கு அந்த சக்கர நாற்காலிதான் வீடு...''

காவ்யாவுக்கு திடீரென்று தன்னுடைய தலைக்காயம், மனசுக்குள் உட்கார்ந்திருந்த கணவனைப் பற்றிய கனமான கவலை - எல்லாமே மரத்துப் போயிற்று.

''உங்க டாட்டருக்கு போலியோவா?''

''அவளைப் பார்க்கறீங்களா...?''

''ம்...''

''வாங்க... உங்களாலே நடக்க முடியுமா...?''

''தாராளமா...! எனக்கு இப்போ ஒண்ணுமேயில்லை...'' காவ்யா எழுந்து கௌரிசங்கரைத் தொடர்ந்தாள். எல்லா அறைகளிலும் பணக்காரத்தனம் நிரம்பி வழிந்தது. ஹாலையொட்டின மாதிரி இருந்த இடதுபக்க அறையில் கௌரிசங்கர் நுழைந்தான்.

கொஞ்சம் சிறிய அறை. ஜன்னல்களின் கர்ட்டன்கள் இறுக்கமாய் இழுத்து விடப்பட்டிருக்க - அறையில் ட்யூப்லைட் வெளிச்சம் நிரம்பியிருந்தது. சுவரோரமாய் ஒரு ஆர்ட் ஸ்டாண்ட்டும் - அதில் வெள்ளைச் சதுரமாய் ஒரு பேப்பரும் தெரிய - எதிரே சக்கர நாற்காலியில் அந்தப் பெண் தெரிந்தாள். கையிலிருந்த பிரஷ் ஆரஞ்சு வர்ணத்தையும் - நீல வர்ணத்தையும் மாறி மாறிக் குழைத்துக் கொண்டிருந்தது.

''ஜமுனா...!''

அந்தச் சிறுமி சக்கர நாற்காலியோடு திரும்பினாள்.

அந்தச் சிறுமி சக்கர நாற்காலியோடு திரும்பினாள். பிஞ்சு ஆரஞ்சு சுளைகளாய் உதடுகள்.

உருண்டை முகம். அகலக் கண்கள். பிஞ்சு ஆரஞ்சு சுளைகளாய் உதடுகள். எண்ணெய் மினுமினுப்போடு பாப் தலை. ரோஜா நிற கவுன். காதில் ஆடும் பொன் வளையங்கள்.

''டாடி...'' என்று மலர்ந்தவள் காவ்யாவின் பக்கமாய்த் திரும்பி ஒரு சிநேகபூர்வமாய் புன்னகைத்தாள். ''ஆர் யூ ஆல்ரைட் ஆன்ட்டி?''

''ஆல்ரைட்...'' காவ்யா ஜமுனாவின் கன்னத்தைத் தட்டினாள்.

''எப்படி ஆன்ட்டி ரோட்ல விழுந்தீங்க? யாராவது பிடிச்சுத் தள்ளிவிட்டாங்களா...? இல்லே, நீங்களாவே விழுந்திட்டீங்களா...?

''நானே விழுந்திட்டேம்மா.'' காவ்யா சொல்ல - ஜமுனா சிரித்தாள்.

கௌரிசங்கர் குறுக்கிட்டான்:

''ஜமுனா... ஆன்ட்டி யார் தெரியுமோ...?''

''யாரு...?''

''ஒரு ஸ்கூல்ல மாத்ஸ் டீச்சர் -''

''ஆன்ட்டி... நான் கணக்குல தான் ரொம்பவும் வீக்...''



காவ்யா கௌரிசங்கரைப் பார்த்தாள்.

''ஜமுனா பள்ளிக்கூடத்துக்குப் போறாளா?'' கௌரிசங்கர் ஏதோ சொல்ல

...யைத் திறந்த நேரம் - ஜமுனா சொன்னாள்: ''நான் பள்ளிக் கூடத்துக்குப் ...றதில்லை ஆன்ட்டி... பள்ளிக்கூடம்தான் இங்கே வருது... ஒவ்வொரு ...ஜெக்ட்டுக்கும் ஒவ்வொரு மிஸ் வர்றாங்க... மாத்ஸ் மிஸ் மட்டும் இரண்டு ...மா வரலை... நீங்க எனக்குச் சொல்லித் தர்றீங்களா ஆன்ட்டி...?''

''அப்படியெல்லாம் கேக்கக்கூடாது ஜமுனா... ஆன்ட்டிக்கு வீட்ல நிறைய ...வலை இருக்கும். நான் உனக்கு வேற மாத்ஸ் மிஸ்ஸை ஏற்பாடு ...றேன்...''

காவ்யா குறுக்கிட்டாள்: ''மிஸ்டர் கௌரி சங்கர்... என்னோட வாழ்க்கையில ...க்கற எல்லாச் சம்பவங்களும் திடீர் திடீர்னுதான் நடக்கும். இன்னிக்கு நான் ...லையில பள்ளிக் கூடத்துக்குக் கிளம்பும் போது - நான் பஸ் ஸ்டாப்புல ...ழுவேன்னு எதிர்பார்க்கலை. நீங்க கார்ல கொண்டு வந்து ட்ரீட்மெண்ட் ...டுப்பீங்கன்னும் நான் எதிர்பார்க்கலை... என்னைப் பத்தி நீங்க ...தெரிஞ்சுக்குவீங்கன்னோ... உங்களைப் பத்தி நான் தெரிஞ்சுக்குவேன்னோ ...திர்பார்க்கலை... நாம ரெண்டு பேருமே வாழ்க்கையில ஏதோ ஒரு வகையில உதவி ...நாந்து போயிருக்கோம். உங்களுக்கு நான் ஏதாவது ஒரு வகையில உதவி ...செய்ய விரும்பறேன். அந்த உதவி ஜமுனாவுக்கு மாத்ஸ் சொல்லித்தர்ற ...தவியா இருக்கட்டுமே - நான் தினசரி சாயந்தரம் ஆறு மணிக்கு இங்கே ...ர்றேன். ஜமுனாவுக்கு ஒரு மணி நேரம் ட்யூஷன் எடுக்கிறேன்.''

''தாங்க்யூ ஆன்ட்டி...''

''இப்பவே... அவசரமில்லை மிஸஸ் காவ்யா... உங்க தலைக்காயம் ...ர்ணமா ஆறட்டும். அப்புறமா பார்த்துக்கலாம்...''

''இன்னிக்கு என்ன கிழமை?''

''திங்கட்கிழமை...''

''புதன் கிழமையிலிருந்து நான் வர்றேன்...'' சொன்னபடியே -

புதன் கிழமையிலிருந்து வர ஆரம்பித்தாள் காவ்யா.

## 6



மூன்று மாதங்களுக்குப் பின்னால் -

ஒரு காலை நேரத்தின் எட்டு மணி.

கௌரிசங்கரின் வீட்டு வாசலில் - ஆட்டோவை நிறுத்திவிட்டு உள்ளே போனாள், காவ்யா. போர்டிகோ தூணில் கட்டப்பட்டிருந்த அல்சேஷன் இந்த மூன்று மாத காலத்தில் காவ்யாவைப் பார்த்ததும் - லேசாய் செல்ல முனகல் முனகவும், வாலை வேகமாய் ஆட்டி அவள் மேல் தாவவும் பழக்கமாகியிருந்தது.

வரவேற்பறையில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த

கௌரிசங்கர் காவ்யாவைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டான்.

''வாங்க... காவ்யா...! என்ன காலை நேரத்துல...?''

காவ்யா பதிலொன்றும் பேசாமல் - ஒரு புன்னகையை அவனுக்குக் கொடுத்தபடியே -

தன் வலைக் கூடையில் இருந்த டாஃபி பாக்ஸை எடுத்து நீட்டினாள்.

''மிட்டாய் எடுத்துக்குங்க கௌரிசங்கா...''

''என்ன விசேஷம்...? உங்க பிறந்த நாளா?''

''நோ...''

''பின்னே பிரமோஷனா?''

''தப்பு... டீ பிரமோஷன். எனக்கு டைவோர்ஸ் கிடைச்சிருக்கு... கௌரிசங்கர்... இந்த நிமிஷத்திலிருந்து கணவன் என்கிற சங்கிலி என் கால்ல கிடையாது. நான் மனைவிங்கிற உரிமையும் அவருக்குக் கிடையாது... இன்னும் ரெண்டு நாள்ல நான் குழந்தைகளோட மருதமலைக்குப் போய் - அந்த முருகனைக் கும்பிட்டு - என் கழுத்திலிருக்கிற அவர் கட்டின தாலியைக் கழற்றி உண்டியல்ல போட்டுட்டு வரப் போறேன்...''

''தீர்மானம் பண்ணிட்டீங்களா காவ்யா?''

''பண்ணிட்டேன்...''

''பின்னாடி உங்க கணவர் மனசு மாறி மன்னிப்புக் கேக்க வந்தா நீங்க அவர்கூட போயிட மாட்டீங்களே...''

''நான் வளர்த்த நாய் கூட அவர் பின்னாடி போகாது...''

''குட்... நீங்க இப்போ பள்ளிக்கூடத்துக்கா கிளம்பிப் போயிட்டிருக்கீங்க?''

''ஆமா...''

''ஒரு பத்து நிமிஷம் எனக்காக இந்த நாற்காலியில் வெயிட் பண்ண முடியுமா?''

''எதுக்கு...?''

''நான் பத்து நிமிஷம் கழிச்சு வந்து சொல்றேன்...'' டீபாயின மேலிருந்த வார இதழ்களையும், நாளிதழ்களையும் அவள் பக்கமாய் நகர்த்தி வைத்து விட்டு உள்ளே எழுந்து போனான் கௌரிசங்கர்.

காவ்யா குழப்பமாய் ஒரு வார இதழை புரட்டியபடி காத்திருந்தாள். அவஸ்தையான பத்து நிமிஷங்களுக்குப் பின்னால் -

கௌரிசங்கர் வந்தான்.

கையில் ஒரு கவர்.

''இந்தாங்க காவ்யா... இதைப் பள்ளிக் கூடத்திற்குப் போனதும் லீசர் பீரியட்ல வெச்சுப் பிரிச்சுப் பாருங்க...''

''என்ன இது...?''

''பிரிச்சுப் பாருங்க தெரியும்...''

காவ்யா தயக்கமாய் வாங்கிக் கொண்டாள்.



''நான் வர்றேன்...''

''நீங்க கொடுத்த ஸ்வீட்டை நான் இன்னமும் எடுத்துக்கவேயில்லை... காவ்யா...''

காவ்யா டாஃபி பாக்ஸை நீட்ட - கை நிறைய சாக்லேட்டுகளை அள்ளிக் கொண்டான் கௌரி சங்கர்.

விடை பெற்றுக் கொண்டு ஆட்டோவுக்கு வந்தாள். ''லிட்டில் ஃப்ளவர் ஸ்கூல்'' என்று சொல்லிவிட்டு ஆட்டோவுக்குள் ஏறி உட்கார - அது புறப்பட்டது.

கையிலிருந்த கவரைப் பார்த்தாள். ஸ்கூலுக்குப் போனால் - சக ஆசிரியைகளுக்கு முன்னால் கவரைப் பிரிக்கவே முடியாது. ஆட்டோ போகும்போதே பிரித்துப் பார்த்தால் என்ன...? யோசிப்பு செயலுக்கு வர -

பிரித்தாள்.

கவரின் வாயிலிருந்து - நான்காய் மடிக்கப் பெற்ற அந்தக் கடிதம் எட்டிப் பார்க்க - உருவினாள். ஆட்டோ குலுக்கல் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்க - மடித்த கடிதத்தைப் பிரித்தாள். வார்த்தைகளின் மேல் கண்கள் போய் ஒட்டிக் கொண்டன.

'காவ்யா!

இந்த நிமிஷத்திற்காகத்தான் நான் கடந்த மூன்று மாத காலமாய்க் காத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் இன்னொருவரின் மனைவி என்ற ஒரேயொரு காரணத்துக்காகத் தான் இந்த மூன்று மாதமும் நான் எதுவும் சொல்லாமல் இருந்தேன். இன்றைக்கு நீங்கள் சட்டப்படி - அந்த இன்னொருவருக்கு மனைவியில்லை. எனவே தயக்கமில்லாமல் இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு மனைவி வேண்டும் என்கிற எண்ணத்தைவிட ஜமுனாவிற்கு ஒரு தாய் வேண்டும் என்று எண்ணுகிறவன் நான். நீங்கள் இன்னும் இரண்டு நாளில் மருதமலைக்குப் போய் - முருகனைக் கும்பிட்டு உங்கள் கழுத்தில் இருக்கும் தாலியைக் கழற்றி உண்டியலில் போடப் போவதாகச் சொன்னீர்கள்.

நீங்கள் அப்படி தாலியைக் கழற்றி உண்டியலில் போட்டு விட்டு நிமிர்கிற நிமிஷம் நான் கட்டப்போகும் தாலியை ஏற்றுக் கொள்வீர்களா?

- கௌரிசங்கர்'

ஆட்டோ தட்டென்று நின்றது. கம்பியில் போய்த் தலை[illegible] முட்டிக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் காவ்யா.

''என்ன டிரைவர்...?''

''ரயில்வே கேட் போட்டுட்டாங்கம்மா...''

''நேரமாகுமா?''

''எப்படியும் பதினஞ்சு நிமிஷமாயிடும்மா...'' அவன் சொல்லிக் கொ[illegible] கீழே இறங்கி - பக்கத்தில் நின்றிருந்த ஆட்டோ டிரைவரிடம் அ[illegible]

அடிக்கப் போனான்.

காவ்யா கையிலிருந்த கடிதத்தை மறுபடியும் படித்தாள். ஒவ்வொரு வார்த்தையும் ஜெண்டில்மேன் தனமாய் இருந்தது.

'நீங்கள் அப்படித் தாலியைக் கழற்றி உண்டியலில் போட்டு விட்டு நிமிர்கிற நிமிஷம் நான் கட்டப்போகும் தாலியை ஏற்றுக் கொள்வீர்களா...?'

காவ்யாவுக்குக் கோபம் வர மறுத்தது.

சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ரெயில்வே கேட் அருகே அந்த டெலிபோன் பூத் தெரிய - சட்டென்று இறங்கினாள்.

''எங்கேம்மா போறீங்க...?'' டிரைவர் கேட்டான்.

''ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன்...''

''சீக்கிரமா வந்துடுங்கம்மா...''

காவ்யா டெலிபோன் பூத்தை நோக்கிப் போனாள். கண்ணாடிக் கதவைத் திறந்து - உள்ளே போய் ஒரு நாணயத்தைத் தயாராய் வைத்துக் கொண்டு - கௌரிசங்கர் வீட்டு டெலிபோன் எண்களைச் சுழற்றினாள். மூன்றாவது ரிங்கில் கௌரிசங்கரின் 'ஹலோ' குரல் கேட்டதும் நாணயத்தை சொருகி விட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டாள்.

''ஹலோ... நான் காவ்யா...''

''நீ... நீங்களா... எங்கிருந்து பேச... றீங்க...?''

''நார்த் கோயமுத்தூர் ரயில்வே கேட் டெலிபோன் பூத்திலிருந்து...''

மறுமுனையில் மௌனமாயிருந்தான் கௌரிசங்கர். காவ்யா தொடர்ந்து பேசினாள்: ''உங்க லெட்டரை ஆட்டோவில் போறப்பவே படிச்சுட்டேன்... ரொம்ப நல்லா எழுதியிருந்தீங்க...''

''....................''

''என்ன, லெட்டரைக் குடுத்துட்டு பேசாமே இருக்கீங்க... கௌரிசங்கர்?''

''நீங்க என்னைத் தப்பா நினைச்சுடலையே?''

''நோ... நோ... சட்டப்படி நான் டைவோர்ஸ் வாங்கின பின்னாடிதானே உங்க அப்ளிகேஷனையே போட்டிருக்கீங்க... நோ... ஹார்ம்... ஆனா ஒரு விஷயத்தை நீங்க நினைக்க மறந்துட்டீங்க... நீங்க என்னைக் கல்யாணம் செஞ்சுக்க விரும்பலாம்; அதே மாதிரி நானும் விரும்பலாம். ஆனா உங்க குழந்தை ஜமுனாவும் - என்னோட குழந்தைகள் வீரேஷ்குமாரும் - ரமாவும் விரும்புவாங்களா? நான் ஒரு புது அம்மாவா உங்க வீட்டுக்குள்ளே வர்றதை ஜமுனா விரும்புவாளா? அதே மாதிரி நீங்க ஒரு புது அப்பாவா உருவெடுக்கிறதை என்னோட குழந்தைங்க விரும்பு வாங்களான்னு தெரியலை...''

''நான் எம்பொண்ணு ஜமுனாவைக் கேட்டுப் பார்த்துட்டேன் காவ்யா... நான் சொன்னதுமே அவ பச்சைக்கொடி காட்டிட்டா...''

''கௌரிசங்கர்!''



''சொல்லுங்க...''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடி நீங்க நிறைய யோசிக்கணும்''

''யோசிச்சுப் பார்த்துட்டேன்...''

''நான் பத்து வருஷகாலமா ஒருத்தரோட படுக்கையைப் பகிர்ந்து கிட்டவ... ரெண்டு குழந்தைகளுக்குத் தாய்... கட்டின புருஷனையே வேண்டாம்னு சொல்லி டைவோர்ஸ் வாங்கினவ.''

''தெரியும்...''

''நீங்க பெரிய பிஸினஸ்மேன்... அந்தஸ்துல உங்க உயரம் அதிகம்...''

''சரி...''

''நான் ஒரு ஸ்கூல் டீச்சர்''

''சரி...''

''ஒரு டைவோர்ஸ் கேஸைக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்னு பின்னாடி வருத்தப் படுவீங்க...''

''மாட்டேன்...''

''இதோ பாருங்க கௌரிசங்கர்... அவசரத்துல சில யோசனைகள் அற்புதமா தெரியும்... நிதானமா யோசிச்சுப் பார்த்தா அற்பமா தெரியும்... நான் நாளைக்கழிச்சு மறுநாள் காலையில மருதமலைக்குப் போறேன்... நீங்க நல்லா யோசனை பண்ணிட்டு வாங்க...

ஆட்டோ டிரைவர் டெலிபோன் பூத்தின் கதவைத் தட்டினான்:

''அம்மா... சீக்கிரமா வாங்க... கேட்டைத் திறக்கப் போறாங்க... வண்டியை எடுக்கலைன்னா பின்னாடி நிக்கிற சேரன் பஸ்காரன் கெட்ட வார்த்தையிலேயே திட்டுவான்...''

காவ்யா பேச்சை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.



## 7

பிறகு வந்த நாற்பத்தெட்டு மணி நேரங்களில் - பத்து மணி நேரம் காவ்யா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கௌரிசங்கர் தீர்மானமாய் இருந்தான். செய்து வைத்திருந்த புதுத் தாலியைக் காட்டினான்.

''கல்யாணத்துக்கு யார் யாரைக் கூப்பிடப் போறீங்க...?'' காவ்யா கேட்டாள்.

''யார் யாரைக் கூப்பிடலாம்... நீங்களே சொல்லுங்க...''

''என் கூட வேலை செய்யற டீச்சர்ஸ்''

''எத்தனை பேர் இருப்பாங்க...?''

''பதினைஞ்சு பேர்...''

''சரி கூப்பிட்டு விடலாம்...''

''என்னோட அண்ணா... அண்ணி...''

கௌரிசங்கர் தயங்கினான்: ''அவங்களுக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லேன்னு சொன்னீங்க...?''

''ஆமா; இஷ்டமில்லைதான்... கடைசி நேரத்துல அண்ணன் மட்டும் வந்தாலும் வரலாம்.''

''அப்புறம்...?''

''அவ்வளவுதான்...!''

''ஒரு முக்கியமான நபரை விட்டுட்டீங்களே காவ்யா...?''

''யார்...?''

''உங்க எக்ஸ் - ஹஸ்பெண்ட்...''

''கூப்பிட்டா... அவர் வருவாரா என்ன...?''

''நான் வரவழைக்கிறேன்...''

''எப்படி...?''

''அவர்... வேலை செய்யற... ஆபீஸ் போன் நெம்பர் இருந்தா குடுங்க!''

காவ்யா கொடுத்தாள்.

டெலிபோனை நகர்த்தி வைத்துக் கொண்டு குணசேகரனின் ஆபிஸ் போன் நெம்பரை டயலில் சுழற்றினான். இரண்டாவது நிமிஷம் டெலிபோன் ஆபரேட்டர் மூலமாய் - குணசேகரன் லைனில் வந்தான்.

''ஹலோ! மிஸ்டர் குணசேகரன்?''

''எஸ்...!''

''நீங்க நாளைக்குக் காலைல ஏழு மணிக்கு மருதமலை வரமுடியுமா?''

''நீங்க யாரு...?

''அங்கே வந்தா தெரிஞ்சுக்குவீங்க...''

''என்ன விஷயம்...?''

''உங்களுக்கு ரொம்பவும் வேண்டிய ஒருத்தருக்கு நாளைக்குக் காலைல கல்யாணம் நடக்கப் போகுது... வந்தா வாழ்த்திட்டுப் போலாம்...''

''யார்க்கு கல்யாணம்?''

''வந்து பாருங்க... தெரியும்...''

சிரிப்போடு - ரிஸீவரை வைத்தான் கௌரி சங்கர்.




மறுநாள் காலை ஆறுமணி.

கிழக்கில் 'விடியற்காலை' என்னும் நாடகம் நடந்து கொண்டிருக்க - வீட்டைப் பூட்டிக் கொண்டு வாசலுக்கு வந்தார்கள், குணசேகரனும் இந்துவும் - இருவர் முகங்களிலும் நிறைய குழப்பம் ஒட்டியிருந்தது. வாசலில் நின்றிருந்த ஸ்கூட்டரின் ஸ்டாண்டை விடுவித்தான்



குணசேகரன்.

''என்னங்க? யாரோ விளையாட்டுக்காக போன் பண்ணியிருக்காங்க... நீங்களும் அதை நம்பி மருதமலைக்குக் கிளம்ப ஆயத்தமாயிட்டீங்க!''

''இல்ல... இந்து... அது விளையாட்டுத்தனமான போன் கிடையாது. பேசின குரலில் கேலி கிடையாது... ஒரு சீரியஸ்னஸ் இருந்தது...''

''உங்களுக்கு ரொம்பவும் வேண்டியவங்கள்னு சொன்னாங்களே...? இந்த ஊர்ல உங்களுக்கு யாரு வேண்டியவங்க...?''

''போய்ப் பார்த்தா தான் தெரியும்...''

ஸ்கூட்டரை உதைத்தான் குணசேகரன். ஒரே உதையில் அது கதற, ஸ்கூட்டரின் மேல் பரவிக் கொண்டான். இந்து பில்லியனில் அமர்ந்தாள்.

விடியற்காலைக் குளிரை அறுத்துக் கொண்டு ஸ்கூட்டர் புறப்பட்டது. மருதமலை போகும் பாதையை நோக்கிச் சீற ஆரம்பித்தது.

''இந்து...!''

''ம்...''

''இந்து... எனக்கு ஒரு சின்ன சந்தேகம்...''

''என்ன?''

''டைவோர்ஸ் வாங்கிட்டுப் போன காவ்யாவுக்கு அவளோட அண்ணன்காரன் ஏதாவது கல்யாண ஏற்பாட்டைப் பண்ணியிருப்பானோ...?''

''ரெண்டு குழந்தைகளைப் பெத்த அவளை எவன் கட்டிக்குவான்?''

''எனக்கென்னமோ... அவளோட கல்யாணமாத்தான் இருக்கும்னு மனசுக்குப்படுது...''

''போய்ப் பார்ப்போம்''

ஸ்கூட்டர் வேகம் பிடித்துப் பறந்தது...




மருதமலை.

முருகன் சந்நதிக்கு முன்புறம் - அந்த சின்னக் கும்பல் குழுமியிருந்தது. நடுவே பட்டுப் புடவையும் - தலையில் பூ பாரத்தோடும் காவ்யா தெரிந்தாள். பையன் வீரேஷ் குமாரும், ரமாவும், சக்கர நாற்காலியின் உதவியோடு ஜமுனாவும் மலர்ச்சியாய்க் கண்ணுக்கு சிக்க - கௌரிசங்கர் முழுக்கை பட்டுச் சட்டையிலும் - பட்டு வேஷ்டியிலும் நண்பர்களுக்கு மத்தியில் நின்றிருந்தான். அவனுக்கு வேண்டிய உறவின ஒருவர் அவனருகே வந்தார்; கிசுகிசுத்தார்.

''என்ன கௌரி... முகூர்த்த நேரம்... நெருங்கிட்டிருக்கு... சந்நதிக்குள் போலாமா...?''

''ஒரு அஞ்சு நிமிஷம் பொறுங்க மாமா. முக்கியமான ஒருத்தர்

வேண்டியிருக்கு... அவர் வந்ததும் ஆரம்பிச்சுடலாம்...''

கொஞ்சம் தள்ளி நின்றிருந்த காவ்யாவின் காதுகளில் இந்த வார்த்தைகள் விழவும் - அவள் புன்னகையோடு கௌரிசங்கரை நோக்கித் திரும்பினாள்.

''நீங்க எதிர்பார்க்கிற அவர் கண்டிப்பா வரமாட்டார்...''

**வ**டவள்ளியைத் தாண்டியது குணசேகரனின் ஸ்கூட்டர்.

''மணி என்னங்க?'' என்று கேட்டாள் இந்து.

''ஆறரை...''

''முகூர்த்தம் எத்தனை மணிக்குன்னு சொன்னாங்க...?''

''ஏழு மணிக்கு...''

''ஒருவேளை நீங்க சந்தேகப்பட்ட மாதிரியே காவ்யாவோட கல்யாணமாயிருந்தா நீங்க என்ன பண்ணுவீங்க...?''

'' 'தூ'ன்னு அவ மூஞ்சியிலேயே காரித்துப்பிட்டு உடனே கீழே இறங்கி வந்துட வேண்டியது தான்...''

''அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க... காவ்யா இப்போ உங்களுக்குப் பெண்டாட்டியில்லை... ஞாபகம் வெச்சுக்குங்க...''

''இருந்தாலும்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற குணசேகரன் - அந்தக் குறுகலான ரோட்டு வளைவில் - வேகத்தைக் குறைக்காமல் ஸ்கூட்டரைத் திருப்ப -

சட்டென்று எதிரே -

அந்தக் குடிதண்ணீர் லாரி பேய் வேகத்தில் எதிர்ப்பட -

''ச்ச்ச்சட்டீர்...''

ஸ்கூட்டர் நசுங்கிக் காற்றில் தெறிக்க - குணசேகரனும் இந்துவும் லாரியின் சுழலும் சக்கரங்களுக்குக் கீழே சிக்கினார்கள்.

**அ**ந்தப் பெரியவர் அவசரப்படுத்தினார்.

''கௌரி... நேரமாச்சுப்பா... சந்நதிக்குப் போலாம்... முகூர்த்த நேரம் தவறிடப் போகுது...''

''சரி மாமா...'' கௌரிசங்கர் தலையாட்ட எல்லோரும் சந்நதியை நோக்கி நடந்தார்கள். ஜமுனாவை இரண்டு பேர் தூக்கிக் கொண்டார்கள்.

காவ்யா பெண்களுக்கு மத்தியில் - விளக்கின் ஜோதி மாதிரி நடந்தாள். மனசுக்குள் எதுவோ குறுகுறுத்தது. 'இந்தக் கல்யாணம் சரிதானா...?'

'ஒரு வேளை அவர் வந்து பார்த்தால் என்ன நினைப்பார்?'

கும்பல் சந்நதியை நெருங்கியது.

ராஜ அலங்காரத்தில் முருகன் ஏராளமான ரோஜா மாலைகளுக்கு மத்தியில்



புன்னகை செய்து - பார்க்கிற மனங்களைக் கொள்ளையடித்தான்.

''மாப்பிள்ளையும் பொண்ணும் இப்படி சேர்ந்து நில்லுங்க...'' அர்ச்சகர் சொல்ல காவ்யாவும் கௌரிசங்கரும் சேர்ந்து நின்றார்கள்.

பின்னால் நின்றிருந்த ஆசிரியை ஒருத்தி காவ்யாவின் காதருகில் கிசுகிசுத்தாள்: ''காவ்யா...! கழுத்துல இருக்கிற பழைய தாலியைக் கழட்டி உண்டியல்ல போட்டுடு... தாலி கட்டறப்ப அதுவும் இருக்க வேண்டாம்...''

சரியென்ற பாவனையில் தலையாட்டிய காவ்யா - தன் கழுத்திலிருந்த தாலிக் கொடியின் மேல் கையை வைத்தாள்.

**லா**ரி சக்கரத்துக்குக் கீழே - தலை நசுங்கிப் போய் - இந்து சுலபமாய்ச் செத்திருக்க - ஏராளமான ரத்தத்தோடு குணசேகரன் துடித்துக் கொண்டிருந்தான். லாரி டிரைவரும் க்ளீனரும் - ஜனங்களின் கைகளில் அகப்படாமல் இருப்பதற்காக - வயற்காட்டில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

குணசேகரன் தண்ணீருக்காக -

வாயைத் திறந்து திறந்து மூடினான். ரத்தம் பின் மண்டையிலிருந்து நிற்காமல் வழிந்தது. நெஞ்சுப்பகுதி தூக்கித் தூக்கிப் போட்டது.

சரியாய் ஒரு நிமிஷம் துடித்தான் குணசேகரன்.

பின் மெதுவாய் -

கொஞ்சம் கொஞ்சமாய் -

அடங்க ஆரம்பித்தான்.




**தா**லியைக் கழற்றி உண்டியலில் போட்டாள் காவ்யா.

உடம்பில் ஏதோ ஒரு பிரகாசம் மங்கிப் போன மாதிரி உணர்வு. 'இப்படிச் செய்தது சரியா...?' அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே - கனமான ரோஜா மாலையை அவளுடைய கழுத்தில் கௌரிசங்கர் போட்டான். இன்னொரு மாலையை அவளுடைய கையில் யாரோ கொடுத்து கௌரிசங்கருக்குப் போடச் சொன்னார்கள்.

அவள் போட்டாள்.

அர்ச்சகர் கற்பூர ஆரத்தி காட்டி - தேங்காய்ப் பழத்தட்டில் மாங்கல்யத்தைக் கொண்டு வந்தார். பெரியவர் சொன்னார்:

''கௌரி! இன்னும் அஞ்சு நிமிஷத்துல முகூர்த்த நேரம் தவறிடும்... சீக்கிரமா எடுத்து தாலியைக் கட்டு...''

கௌரிசங்கர் தாலியை எடுத்தான்.

யாரோ கையோடு கொண்டு போயிருந்த டேப்ரிக்கார்டரின் பட்டனைத் தட்டிவிட - கெட்டிமேளச் சத்தமும் - உச்சஸ்தாயியில் நாதஸ்வரமும் பீறிட்டது.

அட்சதையும் ரோஜா இதழ்களும் தலைகளுக்கு மேலே கொட்ட - கௌரிசங்கர் காவ்யாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான். கழுத்தில் மின்னுகிற புதுத்தாலியோடும் - கண்களில் கனத்து நின்ற கண்ணீரோடும் கௌரி சங்கரின் கால்களில் விழுந்தாள். எல்லாருடைய உதடுகளிலும் சந்தோஷ முணுமுணுப்பு.

ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு -

எல்லோரும் வெளியே வந்தார்கள். பெரியவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

''எல்லாருமே பங்களாவுக்கு வந்து டிபன் சாப்பிட்டுத் தான் போகணும்...''

'பார்க்கிங்' இடத்தில் நின்றிருந்த மூன்று கார்களிலும் - இரண்டு மெட்டாடர் வேன்களிலும் வந்த கூட்டம் பூராவும் நிரம்பிக் கொண்டது.

முதல் காரின் பின் சீட்டில் - கௌரிசங்கரும் காவ்யாவும் ரோஜா மாலையோடு நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க - முன் சீட்டில் வீரேஷ், ரமா, ஜமுனா உட்கார்ந்திருந்தார்கள். டிரைவர் காரை நகர்த்தினார். கௌரிசங்கர் கிசுகிசுத்தான்:

''காவ்யா!''

''ம்...''

''நீ சொன்ன மாதிரியே அவர் வரலை.''

''அவரைப் பத்தி இனிமே பேசாதீங்க...''

''ஏன்...?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் அவர் வேறு யாரோ தான்...''

கார் வேகம் பிடித்து யானைப்பள்ளத்தைத் தாண்டியது. முன்சீட்டில் உட்கார்ந்திருந்த வீரேஷ் தான் முதன் முதலாய்ச் சொன்னான்:

''அம்மா... ரோட்ல பாத்தியா கூட்டம்''

காவ்யா முன்புறக் கண்ணாடி வழியே பார்த்தாள். கொஞ்சம் தொலைவில் அந்தக் கூட்டம் தெரிந்தது. ஒரு லாரி நின்றிருப்பது தெரிந்தது. போலீஸ் ஜீப் தெரிந்தது. காக்கி யூனிஃபார்மின் நடமாட்டம் தெரிந்தது.

''ஆக்ஸிடெண்ட் போலிருக்கு...'' கௌரி சங்கர் சொன்னான்.

''ஆமாங்க... ரோட்டோரமா ஸ்கூட்டர் நசுங்கிக் கிடக்கு...''

''லாரியோட சக்கரங்களுக்குக் கீழே ரெண்டு உடம்பு தெரியுது... செத்துட்டாங்க போலிருக்கு! பாவம் கோயிலுக்கு வந்தவங்களாயிருக்கலாம்...''

காவ்யா எட்டிப் பார்த்துவிட்டு - முன் சீட்டிற்கு தலையைச் சாய்த்து - கண்களை மூடிக் கொண்டாள். ''நான் பார்க்கலை... ரத்தத்தைப் பார்த்தா எனக்கு மயக்கம் வரும்...''

கார் மெதுவாய் ஊர்ந்தது -



லாரியையும் நசுங்கிக் கிடந்த ஸ்கூட்டரையும் தாண்டியது. காவ்யா கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்திருந்தாள்.

''அம்மா...!''

முன் சீட்டில் உட்கார்ந்திருந்த வீரேஷ் - தவிப்பாய்க் கூப்பிட்டுக் கொண்டே காவ்யாவின் தோள் மேல் கையை வைத்தான்.

''என்ன வீரேஷ்...?''

''நம்ம அப்பா ஸ்கூட்டர் மாதிரியே இருக்கம்மா...''

விலுக்கென்று நிமிர்ந்தாள் காவ்யா.

''டிரைவர் காரை நிறுத்து...''

கார் நின்றது.




**சோ**பாவில் நிலைகுத்திப் போய் உட்கார்ந்திருந்த கௌரிசங்கர், அவளுடைய கையை அசைத்துக் கூப்பிட்டான்: ''காவ்யா...!''

''ம்...''

''ஏன் இப்படி இருக்கே...?''

''எனக்கு மனசே சரியில்லீங்க... நான் தப்பு பண்ணிட்டேன்.''

''இதோ பார் காவ்யா... நீ ஒரு தப்பும் பண்ணலை... தப்பு பண்ணின உன்னோட கணவனுக்கும் - அந்தப் பெண்ணுக்கும் ஆண்டவனே தண்டனையைக் குடுத்துட்டான்... நாம தொடங்கப் போற புது வாழ்க்கைக்கு இனிமே எந்தத் தடையுமே இல்லை...''

''என்னங்க...!''

''ம்...''

''நான் ஒண்ணு சொன்னா நீங்க கேப்பீங்களா?''

''சொல்லு...''

''நாம இன்னிக்கு நடந்த கல்யாணத்தை மறந்துட்டு எப்பவும் போல தனித்தனியா இருந்துடலாங்க...''

''காவ்யா... நீ என்ன சொல்றே?''

''நான் பழையபடி அந்த வீட்டுக்கே போயிடறேன்... நீங்க கட்டின இந்த தாலி உங்க ஞாபகார்த்தமா என் கழுத்திலேயே இருக்கட்டும்... நானும் என்னோட ரெண்டு குழந்தைகளும் எப்பவும் போல தனி இருந்துடறோம்...''

''காவ்யா...!'' - லேசாய்க் கோபமானான் கௌரிசங்கர். பொரிந்தான்: ''எல்லாமே முடிஞ்சு போன பின்னாடி உனக்கு உன்

முதல் புருஷன் மேலே திடீர்னு பாசம் பொத்துக்கிட்டு வந்துடுச்சு... அவர் உனக்குப் பண்ணின துரோகத்தை மறந்துட்டியா...?''

''இந்த நிமிஷம் அதெல்லாம் பெரிசாவே தோணலைங்க எனக்கு''

''முடிவா... நீ என்னதான் சொல்றே காவ்யா?''

''நான் பழையபடி அந்த வீட்டுக்கே போயிடறேன்ங்க... இன்னிக்கு நடந்த கல்யாணத்தை நானும் மறந்துடறேன்... நீங்களும் மறந்துடுங்க...''

''காவ்யா... நல்லா யோசி...! உனக்குக் கிடைச்சிருக்கிற இந்த லட்சுமிகரமான வாழ்க்கையை நீ தான் உதறித் தள்ளறே...!''

''எனக்கு இந்த வாழ்க்கையே வேண்டாங்க... அவர் லாரிக்குக் கீழே நசுங்கிப் போய் செத்துக் கிடந்த காட்சி - என்னோட இருதயத்துல படம் மாதிரி பதிஞ்சிடிச்சுங்க... என்னாலே இனிமே இந்தப் புது வாழ்க்கையோடு ஒத்துப் போக முடியாதுங்க!''

''முடிவாத்தான் சொல்றியா காவ்யா?''

''தீர்மானமே பண்ணிட்டேன்ங்க...'' எழுந்தாள் காவ்யா.

கௌரிசங்கர் கண்களில் கோபம் கொப்பளிக்கப் பார்க்க - அதைப் பொருட்படுத்தாத காவ்யா - திகைத்துப் போய்க் கதவருகே நின்றிருந்த வீரேஷையும், ரமாவையும் கூட்டிக் கொண்டு வெளியேறினாள்.




ஏறக்குறைய பதினாறு வருஷங்கள்!

கௌரிசங்கரைப் பார்க்காமல் - அவனோடு டெலிபோனில் கூட பேசாமல் - தன் இரண்டு குழந்தைகளோடு நாட்களை ஓட்டி விட்டாள் காவ்யா. நடுவில் ஒரே ஒரு தடவை கௌரிசங்கர் மட்டும் அவளுடைய ஸ்கூலுக்குப் போன் செய்து பேசினான்:

''காவ்யா...''

''ம்...''

''எப்படியிருக்கே...?''

''நல்லாத்தான் இருக்கேன்...''

''நீ உன்னோட முடிவை மாத்திக்கவே மாட்டியா...?''

''மாத்திக்கிற எண்ணமே இல்லீங்க...''

''நீ இந்த முடிவுக்கு வந்த பின்னாடி நானும் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்...''

''என்ன?''

''இங்கே இருக்கிற சொத்தைப் பூராவும் வித்துட்டு - நானும் ஜமுனாவும் சிங்கப்பூர்ல போய் செட்டிலாயிடலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்...''

''எதுக்காக இந்த திடீர் முடிவு...?''

''ஜமுனாவோட அத்தை மகன் சிங்கப்பூர்ல இருக்கான்... ஜமுனாவை



அவனுக்கே கட்டிக் குடுத்துடலாம்ன்னு எண்ணம்... ஜமுனாவோட போலியோ கால் சரியானதுக்கு முக்கியக் காரணமே, அவன் சிங்கப்பூரிலிருந்து கூட்டிட்டு வந்த டாக்டர்ஸ் தான்...''

''என்னிக்குப் புறப்பட்டுப் போறீங்க?''

''பதினஞ்சு நாள்ல...''

''ஜமுனாவுக்கு என்னோட கல்யாண வாழ்த்துக்களைச் சொல்லுங்க கௌரிசங்கர்''

''காவ்யா...!

''ம்...''

''இப்பவும் நான் உனக்காகக் காத்திட்டிருக்கேன்''

''நீங்க சிங்கப்பூர்க்குப் போயிடறதுதான் நல்லது... ரிஸீவரை வெச்சுடட்டுமா...? பீரியடுக்குப் போகணும்...'' - சொல்லி விட்டு அவனுடைய பதிலுக்காகக் கூட காத்திருக்காமல் ரிஸீவரைச் சாத்திவிட்டாள்.

அடுத்த பதினைந்து நாளில் யாரோ அவளுடைய காதுபடச் சொன்னார்கள்: ''கௌரி சங்கரும் அவரோட பொண்ணும் ரெண்டு கோடி ரூபாய்க்கு சொத்து பூராவும் வித்துட்டு சிங்கப்பூர் போயிட்டாங்க...''

பெருமூச்சு விட்டாள் காவ்யா.

''அம்மா...!''

பழைய நினைவுகளோடு - பால்குக்கர் விசிலடிப்பதற்காகக் காத்திருந்த காவ்யா திரும்பினாள். சமையலறை நிலைவாசலில் ரமா நின்றிருந்தாள். உடம்பில் இருபத்திரண்டு வயதின் ஊட்டமும் அழகும் தெரிந்தது. குணசேகரனின் சாயலை லேசாய் வாங்கியிருந்தாள்.

தனியார் கம்பனியொன்றில் டைப் மெஷினைத் தட்டும் உத்யோகம்.

''என்ன ரமா புறப்பட்டுட்டியா...?''

''ஆமாம்மா... ஆபீஸ்ல இன்னிக்கு அக்கௌண்ட் ஸ்டேட்மெண்ட் காப்பீஸ் நிறைய அடிக்கணும். மானேஜர் கொஞ்சம் சீக்கிரமாகவே வரச் சொல்லியிருக்கார்...''

''இரு ரமா...! நிமிஷத்திலே ரவா உப்புமா கிளறித் தர்றேன். சாப்பிட்டுப் போகலாம்...!''

''வேண்டாம்மா... நான் டிபன் சாப்பிட உட்கார்ந்தா... பஸ் புறப்பட்டுப் போயிடும்... நான் ஆபீஸ் கான்டீன்ல போய்ச் சாப்பிட்டுக்கறேன்...''

''அண்ணன் என்ன பண்றான்? இன்னும் தூங்குறானா...?''

''குளிச்சுட்டிருக்கான்...'' சொல்லிவிட்டு ரமா கிளம்பினாள்.

''ரமா... கொஞ்சம் நில்லு...!''

''என்னம்மா...?'' எரிச்சலாய் நின்றாள்.

''சாயந்தர நேரத்துல கொஞ்சம் சீக்கிரமா வந்துடும்மா... தினமும் நீ வர ஏழு மணியாயிடுது...''

ரமா முகம் சிவந்தாள்: ''மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளம் தர்றான்... ஆபிஸ்ல வேலை கொஞ்சமாவா இருக்கும்...? எப்படியும் வர முன்னே பின்னேதான் ஆகும்... உம் பொண்ணு அஞ்சு மணிக்கே வரணும்னு நீ நினைச்சா... நான் இந்த வேலையை விட்டுட வேண்டியது தான்...''

''சரி... சரி... கோபப்படாதே...! சீக்கிரமா வரப் பாரு...'' காவ்யா சொல்லச் சொல்ல முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள் ரமா.

பால்குக்கர் விசிலடித்தது.

கீழே இறக்கிக் காபி கலந்து - நுரை ததும்ப டம்ளரில் நிரப்பிக் கொண்டு எழுந்தாள் காவ்யா. முழங்காலில் மூட்டுவலி விண்ணென்று தெறித்தது. மெல்ல நடந்து முன்னறைக்கு வந்தாள். வீரேஷ் தலையைத் துவட்டியபடி எதிர்ப்பட்டான். இருபத்தி நாலு வயதில் கண்களை நிறைத்தான். தினமும் ஆடுகிற டென்னிஸ் உடம்பைக் கட்டாய் வைத்திருந்தது.

''என்னம்மா... ரமா புறப்பட்டுட்டாளா...?''

''இப்பத்தான் போனா...''

''இந்த மாசம் அவ சம்பளம் வாங்கினதுமே - வேலைக்குப் போக வேண்டாம்னு சொல்லிரும்மா...''

''ஏண்டா...?''

''அவளைப்பத்தி என்னோட காதுல வந்து விழற நியூஸ், நல்ல நியூஸ் கிடையாது...''

''டேய்! நீ என்னடா சொல்றே...?''

''அவ அன்வர்ங்ற பையனை லவ் பண்றாம்மா...! நீ கவனிச்சிருக்கலாம். அவ கொஞ்ச நாளா நெத்திக்குப் பொட்டு வெச்சுக்க மாட்டா...''

''ஆமா...!'' அதிர்ந்து போனாள் காவ்யா. கடந்த ஒரு மாத காலமாய் அவள் எதையும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதில்லை என்கிற நினைப்பு மனசில் அடித்தது.

''யார்ரா அந்தப் பையன்?''

''அவன் யார்ன்னு எனக்குத் தெரியா தம்மா... ரெண்டு நாளைக்கு முன்னாடி எனக்கு ஒரு டெலிபோன் கால் வந்தது. யாரோ பேசினாங்க... 'உன்னோட தங்கச்சி அன்வர்னு ஒருத்தனை காதலிக்கிறா... கண்டிச்சு வை'ன்னு சொன்னாங்க...''

''ரெண்டு நாளா என்கிட்டே ஏண்டா சொல்லலை...?''

''அந்த நியூஸ் உண்மையா, பொய்யான்னு தெரியாம நான் எப்படியம்மா உன்கிட்டே சொல்ல முடியும்...? ரெண்டு நாளா அவளோட நடவடிக்கைகளைக் கவனிச்சுட்டுத் தான் வர்றேன்... ஆபிஸுக்கு சீக்கிரமா போறதும்... லேட்டா வர்றதும்...''

''இப்போ என்னடா பண்ணலாம் வீரேஷ்?''

''அவ சாயந்தரம் ஆபீஸிலிருந்து வரட்டும்... நான் பக்குவமா அவகிட்டே கேக்கறேன்...''

''டேய்...!''



''சொல்லும்மா...''

''அவளுக்கு சீக்கிரமா கல்யாணத்தை முடிக்கணும்... புரோக்கர் கிட்டே சொல்லி ஒரு நல்ல வரனா பாருடா...''

''ஏற்பாடு பண்ணிடறேம்மா...'' சொல்லிக் கொண்டே தலையைத் துவட்டியபடி நிலைக் கண்ணாடியருகே போனான் வீரேஷ். தலையைச் சீவி - டிரஸ்ஸை மாற்றிக் கொண்டு வருவதற்குள் காவ்யா உப்புமாவைக் கிளறி வைத்திருந்தாள்.

சாப்பிட உட்கார்ந்து கொண்டே வீரேஷ் கேட்டான்:

''ஏம்மா... ராத்திரி பூராவும் இருமிட்டே இருந்தியே... இன்னிக்கு ஸ்கூலுக்குப் போகப் போறியா...?''

''ம்... போகணும்...''

''ஒரு மாசம் மெடிகல் லீவு போட்டுட்டு வீட்ல இரும்மா...''

''பரீட்சை சமயம் போர்ஷனை முடிக்கணும்டா...''

''ஏம்மா... நான் சம்பாதிக்கிறேன்... ரமா சம்பாதிக்கிறா... நீ இன்னும் வேலைக்குப் போகணுமா...?''

''இன்னும் கொஞ்சநாள் தானே... அப்புறம் ரிடையராயிட்டா வீட்லதானே இருக்கப் போறேன்...'' காவ்யா அவனுக்குப் பரிமாறித் தானும் சாப்பிட்டு - பள்ளிக்கூடம் புறப்படுவதற்குத் தயாரானாள்.

''அம்மா...! நான் சாயந்தரம் சீக்கிரமாவே வந்துடறேன்... ரமா சீக்கிரமா வந்துட்டா நீ எதுவும் பேசிடாதேம்மா... நான் வந்ததும் ரெண்டு பேருமா அவகிட்டே பேசுவோம்...''

காவ்யா தலையாட்டினாள்.

வீரேஷ் கிளம்பிப் போனதும் - வீட்டைப் பூட்டிக் கொண்டு தெரு முனையிலிருந்த பஸ் ஸ்டாப்புக்கு வந்து - ஐந்து நிமிஷம் காத்திருந்து பஸ் பிடித்துப் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்த போது ஒன்பது மணி. ஆசிரியைகளுக்கான அறைக்குள் நுழைந்து - ரிஜிஸ்டரில் கையெழுத்திட்டு விட்டு உட்கார்ந்து - அன்றைக்கு நடத்த வேண்டிய நோட்ஸ் ஆப் லெசனைப் புரட்ட ஆரம்பித்தாள் காவ்யா.

ஐந்து நிமிஷம் பார்த்திருப்பாள்.

பின்பக்கமாய்க் குரல் கேட்டது: ''அம்மா...!'' திரும்பினாள்.

பள்ளிக்கூடத்துப் பியூன் பழனிச்சாமி நின்றிருந்தான்.

''என்ன பழனிச்சாமி?''

''ஹெச். எம். ரூம்ல உங்களுக்குப் போன் வந்திருக்கம்மா...''

''எனக்கா...?''

''ஆமாம்மா...''

''போன்ல யாரு...?''

''தெரியல்லேம்மா! யாருன்னு கேட்டா சொல்ல மாட்டேங்கிறாங்க...''

''ஆணா...? பொண்ணா...?''

''பொண்ணுதாம்மா...''

நோட்டைத் தள்ளிவிட்டு எழுந்தாள் காவ்யா... எதிரே வந்த சக ஆசிரியைகளுக்கு ''குட்மார்னிங்'' சொல்லிக் கொண்டே ஹெச். எம். அறையை நோக்கிப் போனாள். தலைமையாசிரியை இன்னும் வந்திருக்கவில்லை. டெலிபோன் ரிஸீவர் மேஜையின் மேல் மல்லாந்திருக்க - காவ்யா அதைப் போய் எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

''அம்மா... நான் ரமா பேசறேன் - ஏர் போர்ட்டிலிருந்து...''

''எதுக்காக ஏர்போர்ட் போனே.? ஆபீஸுக்குப் போகலையா...?''

''இனிமே நான் ஆபீஸுக்குப் போக மாட்டேம்மா...''

''என்னடி... சம்பந்தா சம்பந்தம் இல்லாமே உளர்றே...?''

''அம்மா...! நான் உன்னைக் குழப்பலை... உனக்குப் புரியும் படியாவே சொல்றேன்... நான் இன்னும் பதினஞ்சு நிமிஷத்துல எனக்குப் பிடிச்ச அன்வரோட துபாய்க்குப் போகப் போறேன்... நான் காதலிச்ச அன்வர்க்கு அங்கே வேலை கிடைச்சிருக்கு... ஸோ, நானும் அவர் கூடவே புறப்படறேன்... பாஸ்போர்ட், விசா எல்லாமே போன மாசமே ஏற்பாடு பண்ணிட்டேன்...''

''ர... மா!''

காவ்யாவின் குரல் நடுங்கியது.

ரமா டெலிபோனில் தொடர்ந்தாள்: ''உன்னோட முகத்தைப் பார்த்து இந்த வார்த்தையையெல்லாம் சொல்ல எனக்கு மனசு வரல்லேம்மா... அதுதான் டெலிபோன் பண்ணிப் பேசிட்டிருக்கேன். நானும் அன்வரும் ஆறுமாசமாவே ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருக்கோம்... அன்வர் ஒரு பி.ஈ.பட்டதாரி. அவருக்கு ஒரு வேலை கிடைச்ச பின்னாடிதான் எங்க கல்யாணம் என்கிற விஷயத்துல தீர்மானமாய் இருந்தோம்... பதினஞ்சு நாளைக்கு முன்னாடிதான் அவருக்கு வேலை கிடைச்சுது. துபாய்ல இன்டர்நேஷனல் பிளானிங் சென்டர்ல ஏ.ஈ.யா வேலை. வேலை கிடைச்சதுமே நானும் அவரும் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்...''

''ர... மா...!''

''நான் இப்படிப் பண்ணிட்டேன்னு கவலைப் படாதேம்மா... உன் கூட இருக்கற வரைக்கும் எனக்குக் கல்யாணம் நடக்காது... நம்ம ஜாதியிலிருந்து எவனுமே பெண் கேட்டு வரமாட்டான். அப்படி வந்தாலும் உன்னால குடுக்க முடியாத அளவுக்கு வரதட்சணை கேட்பான்... அதையெல்லாம் யோசிச்சுப் பார்த்துத்தான் - நானே எனக்குரியவரைத் தேர்ந்தெடுத்துக்கிட்டேன். அன்வர் ஒரு ஜெம் அம்மா. பெண்ணைக் காதலிக்கிற மாதிரி நடிச்சு ஏமாத்தற ரகமில்லை.''

காவ்யா பேசத் திணறினாள்.

''ர... மா... நீ இப்படிப் பண்ணுவேன்னு... நான் கொஞ்சம் கூட நினைக்கலைடி... நம்ம குடும்ப கௌரவத்தைப் பத்திக் கொஞ்சம் யோசிச்சுப்



பார்த்தாயா...?''

''அம்மா... நான் உன்னை ஒரு கேள்வி கேக்கலாமா?''

''என்னடி...?''

''அப்பா உயிரோட இருக்கும் போதே - அவர் கட்டின தாலி கழுத்துல இருக்கும் போதே கௌரிசங்கரை நீ ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கிட்டப்ப - போகாத நம்ம குடும்ப கௌரவம், இப்ப நான் என் மனசுக்குப் பிடிச்சவரைக் கல்யாணம் பண்ணிகிட்டப்ப போயிருக்கும்னா நினைக்கிறே?''

''ரமா...!''

''இது என்னோட மொதல் கல்யாணம் தாம்மா... ரெண்டாவது கல்யாணமில்லை...''

''ரமா...''

''நான் உன்னைக் குத்தி காட்டறதா... நீ நினைக்காதேம்மா... இருக்கிற நியாயத்தைச் சொன்னேன்... இந்த பதினாறு வருஷமா... நீ என்னையும் அண்ணனையும் வளர்த்து ஆளாக்க எவ்வளவு கஷ்டப்பட்டேன்னு எனக்குத் தெரியும்...''

''ர... மா... நீ... நீ...?''

''என்னைப்பத்தி நீ கொஞ்சம் கூட கவலைப் படாதேம்மா... நான் ஒரு மகாராணி மாதிரி வாழப் போறேன்... எனக்கு ஆசி சொல்லி அனுப்பும்மா...! நான் அஞ்சு வருஷம் கழிச்சு ஊருக்குத் திரும்பி வர்றப்ப உன்னை வந்து பார்க்கிறேன்... அண்ணன் கிட்டே சொல்லிடும்மா... அவன் என்னிக்குமே உன்கிட்டே இருப்பான்... ஃப்ளைட்டுக்கு நேரமாச்சு... அவர் வெளியே நின்னு கூப்பிடுறார். நான் வரட்டுமாம்மா...?''

''ர... ர... ரமா...'' காவ்யாவின் குரல் அழுகையில் உடைந்தது.

''அப்புறம்... ஒரு முக்கியமான விஷயத்தை சொல்ல மறந்துட்டேன்ம்மா... கடந்த பதினஞ்சு நாளா எம்பேர் ரமா இல்லே... நூருன்னிஸா...''

மறுமுனையில் ரிஸீவரை வைத்து விட்டாள் ரமா.

கையில் ரிஸீவரை வைத்துக் கொண்டு சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றிருந்த காவ்யா உணர்வுக்கு மீண்டு - வீரேஷின் ஆபீஸ் டெலிபோன் நெம்பரை டயலில் சுழற்றினாள்.

வீரேஷ் லைனில் வந்தான்.

''டேய்... வீரேஷ்...!''

''என்னம்மா...?''

ரமாவைப் பற்றிச் சொன்னாள் காவ்யா. அவன் மறுமுனையில் அதிர்ந்து போனது தெரிந்தது. குரல் நடுங்கிக் கேட்டான்: ''நீ என்னம்மா... சொல்றே...?''

''அவ... ஏர்போர்ட்லயிருந்து இப்பத்தாண்டா போன் பண்ணினா...''

''அம்மா... அவளை விடக்கூடாது... நான் ஏர்போர்ட்டுக்குத் தகவல் குடுத்
அவனை நிறுத்தி வெக்கிறேன்...''

''வேண்டாண்டா...''

''எம்மா...?''

''அவதான் பதினைஞ்சு நாளைக்கு முன்னாடியே ரெஜிஸ்டர் கல்யாணம் பண்ணிகிட்டாளாமே... இனிமே அவளைத் தடுத்து நிறுத்தி நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து என்னடா பண்ணப் போறோம்...?''

வீரேஷ் மறுமுனையில் மௌனமானான்.




ரமா துபாய்க்குப் போய் - வருஷம் ஒன்று சுலபமாய் ஓடியிருந்தது. தீபாவளியன்று வந்த ஒரு வாழ்த்துக் கார்டைத் தவிர அவளிடமிருந்து வேறு கடிதமேயில்லை. காவ்யா இந்த ஒரு வருஷ காலத்தில் ரொம்பவும் தளர்ந்து போயிருந்தாள். ராத்திரி பூராவும் ஓயாமல் இருமினாள். பள்ளிக்கு மட்டும் லீவு போடாமல் விடாப்பிடியாய்ப் போய்க் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை.

காலை ஏழுமணி

வீரேஷ் டென்னீஸ் விளையாட கோர்ட்டுக்குப் போயிருந்தான். அவன் வருவதற்குள் டிபனை ஏற்பாடு செய்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் சமையலறையில் மும்முரமாய் இருந்த காவ்யாவின் காதுகளுக்கு அந்த சத்தம் கேட்டது.

வீட்டு வாசலில் கார் வந்து நிற்கிற சத்தம். வெளியே எட்டிப் பார்த்தாள் காவ்யா.

ஸ்டேண்டர்ட் 2000 - அவள் வீட்டு வாசலை அடைத்தபடி நிற்க - அதிலிருந்து அந்த உயரமான மனிதர் வெள்ளைவெளேரென்ற ஜிப்பா வேஷ்டியில் இறங்கிக் கொண்டிருந்தார். ரத்தம் ததும்புகிற நிறம். ஐம்பது வயதைத் தாண்டி - பாதி மண்டைக்கு வழுக்கை வாங்கியிருந்தார். கண்களை மெலிதான பச்சை நிற கூலிங்கிளாஸ் இறுக்கமாய்க் கவ்வியிருந்தது.

வாசல்படி ஏறி உள்ளே வந்தார், அந்த மனிதர். ஏதோ ஒரு பழ வாசனையோடு கூடிய 'செண்ட்' அவர் கூடவே தொற்றிக் கொண்டு வந்தது. கேட்டார்:

''வீரேஷ் வீட்ல இருக்காரா...?''

''இல்லையே... வெளியே போயிருக்கான்...'' காவ்யா மெல்லச் சொன்னாள்.

''நீங்கதானே வீரேஷோட அம்மா...?''

''ஆமா...''

''நமஸ்காரம்...! நான் வீரேஷ் வேலை பார்க்கிற கம்பெனியோட மானேஜிங் டைரக்டர்... எம் பேரு நீலமேகம்...'' கைகளைக் குவித்தார் அவர். மோதிரங்கள் கண்ணாமூச்சி ஆடின.



காவ்யா அவசர அவசரமாய்த் தன் உடம்புக்கு ஒரு மரியாதைத் தளத்தைக் கொண்டு வந்து - சுவரோரமாய்ச் சாத்தி வைத்திருந்த நாற்காலியை எடுத்து விரித்துப் போட்டாள்.

''உட்காருங்க... வீரேஷ் டென்னிஸ் விளையாடப் போயிருக்கான்... இப்போ வந்துடுவான்...''

''வீரேஷ் மெதுவாவே வரட்டும்... நான் முக்கியமா உங்களைப் பார்க்கத்தாம்மா வந்தேன்...'' அவர் பேசிக்கொண்டே தன் கண்களில் இருந்த குளிர் கண்ணாடியைக் கழற்றி ஜிப்பாவின் பைக்குள் போட்டுக் கொண்டார்.

''என்னைப் பார்க்கவா?''

''ம்...''

''என்ன விஷயமா...?''

''வீரேஷோட கல்யாண விஷயமா நீங்க மனசுல என்ன நினைச்சிருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

காவ்யா குழப்பமாய் அவரைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்: ''இன்னும் ஒரு வருஷத்துல அவனுக்குக் கல்யாணத்தை முடிக்கலாம்ன்னு நான் நினைச்சுட்டிருக்கேன்.''

''வீரேஷுக்கு எங்கேயாவது பெண் பார்த்து வெச்சிருக்கீங்களா...?''

''ஊ... ஹும்... இனிமேத்தான் பார்க்கணும்...''

நீலமேகம் மெல்லச் சிரித்தார்.

''அந்தச் சிரமம் கூட உங்களுக்கு இருக்காதுன்னு நான் நினைக்கிறேன்...''

''நீங்க என்ன சொல்றீங்க...?''

''என்னோட டாட்டர் சுதாவைப் பத்தி வீரேஷ் உங்ககிட்டே எப்பவாவது சொல்லியிருக்காரா...?''

''ஊஹும்... சொன்னதில்லை...''

''எப்படி சொல்றதுன்னு தயங்கியிருக்கலாம்... உங்க மகன் வீரேஷும் என்னோட டாட்டர் சுதாவும் இந்த மூணுமாச காலமாவே ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருக்காங்க... எனக்கு இருக்கிறது ஒரே பொண்ணு... சீக்கிரமாவே கல்யாணத்தை நடத்திப் பார்க்க ஆசைப்படறேன்... உலக வழக்கப்படி பையனைப் பெத்தவங்க... பெண் கேட்டு வருவாங்க... ஆனா, நான் எம் பொண்ணுக்காக உங்க பையனைக் கேட்டுட்டு வந்திருக்கேன்... நீங்க சரின்னு சொன்னா, அடுத்த மாசத்திலேயே கல்யாணத்தை முடிச்சுடலாம்ன்னு பார்க்கிறேன்...''

காவ்யா ஜாக்கிரதையானாள்.

''வீரேஷ் இந்தக் கல்யாணத்தைப் பத்தி உங்ககிட்டே ஏதாவது பேசியிருக்கானா?''

''ம்... பேசியிருக்கார்...''

''என்ன... பேசினான்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''எம் பொண்ணு சுதா ரொம்பவும் செல்லமா வளர்ந்த பொண்ணு...

வசதியாவே இருந்து பழக்கப்பட்டவ. அவ கல்யாணமாகி இந்த வீட்டுக்கு வந்தா... இந்த வாழ்க்கைக்கு அவளாலே ஒத்துப் போக முடியாதுன்னு வீரேஷ் சொன்னார்...''

காவ்யா மௌனமாய் இருக்க -

நீலமேகம் தொடர்ந்தார்:

''இந்தச் சிக்கலைத் தீர்க்க நான் ஒரு ஏற்பாட்டைச் சொன்னேன்... வீரேஷுக்கு என்னுடைய கம்பெனியில பார்ட்னர்ஷிப் குடுத்து - என்னோட மகளைக் கல்யாணம் பண்ணி வெச்சு... வீட்டோட மாப்பிள்ளையா வெச்சுக்க முடிவு பண்ணியிருக்கிறதைச் சொன்னேன்... வீரேஷ் தயங்கினார். உங்களைப் பத்தி யோசிச்சார். கடைசி காலத்துல அம்மாவுக்கு ஆதரவு இல்லாமே போயிடுமேன்னு தயங்கித் தயங்கிச் சொன்னார்...''

''அப்புறம்...?'' என்றாள் காவ்யா.

''அம்மாவைப் பத்திக் கவலைப்பட வேண்டாம்னு நான் சொன்னேன்... உங்களுக்கு எப்பவுமே ஆதரவா இருக்கிற மாதிரி உங்க பேர்ல - ஒரு தொகையை பேங்க்ல டிபாசிட் பண்ணி - அதன் மூலமா வர்ற வட்டியை நீங்க அனுபவிச்சுட்டு வரலாம்னு சொன்னேன்...''

''எம் பையன் அதுக்கு என்ன சொன்னான்?''

''அம்மா இதை ஒத்துக்குவாங்களா, மாட்டாங்களான்னு தெரியலைன்னார்... நான் வேணுமானா பேசிப் பார்க்கட்டுமான்னு கேட்டேன்... சரின்னு சொன்னார். அதான் வந்தேன்...''

காவ்யா கசப்பாய்ப் புன்னகைத்தாள்.

''பாங்க்ல எம்பேர்ல ஒரு தொகையை டெபாசிட் பண்ணப் போறீங்க - அப்படித் தானே?''

''ஆமாம்...!''

''என்ன அமௌண்ட் டிபாசிட் பண்ணுவீங்க...?''

''அம்பதாயிரம்...''

''என் மகனோட விலை அவ்வளவு தானா?''

நீலமேகம் முகம் மாறினார்:

''என்னம்மா சொல்றீங்க...?''

காவ்யா மெல்லிய குரலில் சொன்னாள்:

''என் மகன் வீரேஷுக்கு என்ன குறைச்சல்? ஆள் சினிமா ஹீரோ மாதிரி அழகாயிருக்கான். எம்.ஏ. வரைக்கும் அவனைப் படிக்க வெச்சிருக்கேன்... உங்க கம்பெனியில நல்ல உத்யோகம் பார்க்கிறான்... அவனை அடிமாட்டு விலைக்குக் கேக்கறீங்களே... அது நியாயந்தானா...? எம் பையனோட மதிப்பு அம்பதாயிரம் ரூபா தானா?''

''சரி லட்ச ரூபாயை... பாங்க்ல டிபாசிட் பண்ணிடட்டுமா...?''

''நான் எதுக்கும் எம் பையனை ஒரு வார்த்தை கலந்துக் கிட்டு... நாளைக்கு உங்களுக்குச் சொல்லி அனுப்பறேன்...''



நீலமேகம் எழுந்தார்.

கைகளைக் கூப்பினார்: ''நான் சொன்னதைத் தப்பா எடுத்துக்காதீங்கம்மா!''

காவ்யா சிரித்தாள். ''நான் தப்பா நினைக்க மாட்டேன்... நீங்க போயிட்டு வாங்க...''

நீலமேகம் தன் செண்ட் வாசனையோடு காருக்குப் போனார். காவ்யா கார் நகருவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

உடம்பில் ரத்தம் சூடாகியிருந்தது.

'வீரேஷ் தன்னுடைய கல்யாணத்தைப் பற்றி - தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி தன் வருங்கால மாமனாரிடம் விபரமாய்ப் பேசியிருக்கிறான்.

இருபத்திநாலு வருடங்கள் இந்த வீரேஷ் எனக்குச் சுமையாய்த் தெரிந்தது கூட கிடையாது. இன்றைக்கு ஒரு சுதா வந்ததும் நான் எப்படி இவனுக்குச் சுமையாகிப் போனேன்?'

முட்செடியின் மேல் விழுந்த பாம்பாய் நிமிஷங்கள் நகர்ந்தன.

வீரேஷ் எட்டு மணிக்கு வந்தான். வியர்வை மினுமினுக்கும் உடம்பு. களைத்த முகம். வெள்ளைநிற சார்ட் பனியன். கான் வாஸ் ஷூ. கையில் ராக்கெட்.

''அம்மா... காப்பி கிடைக்குமா?'' டவலால் முகத்தைத் துடைத்தபடியே கேட்டான், வீரேஷ்.

''தர்றேன்... உட்கார்டா...''

உள்ளே போய்க் காப்பியைக் கலந்து கொண்டு வந்தாள் காவ்யா. அவனிடம் நீட்டினாள். வீரேஷ் காப்பியைக் குடித்து முடித்து டம்ளரைக் கீழே வைத்து - எழுந்த விநாடி சொன்னாள்:

''வீரேஷ்... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... ஒரு அஞ்சு நிமிஷம் எனக்காக ஒதுக்க முடியுமா?''

வீரேஷ் ஆச்சர்யமாய் அவளைப் பார்த்தான்.

''என்னம்மா... பேச்சு ஒரு மாதிரியா இருக்கு... உங்கிட்டே பேசறதுக்கு நேரம் ஒதுக்கணுமா என்ன?''

''இல்ல வீரேஷ்... சிலபேருக்கு சில சமயங்கள்ல திடீர்னு அந்தஸ்து வந்துடும்... அந்த மாதிரியான நேரங்கள்ல நாம அவங்களோட நேரத்துக்கு மரியாதை தரணும்...''.

''நீ என்னம்மா சொல்றே?''

''நீ பெரிய இடத்துக்கு மாப்பிள்ளையாகப் போறேன்னு சொல்றேன்...''

வீரேஷ் லேசாய்த் திடுக்கிட்டுப் போய் - தன் தாயைப் பார்த்தான். ராக்கெட்டை சுவரின் ஆணியில் மாட்டிவிட்டுக் கொண்டே கேட்டான்:

''எங்க கம்பெனி எம்.டி. வந்திருந்தாராம்மா...?''

''வருங்கால மாமனார்னு சொல்லுடா... அவர் அவ்வளவு பெரிய

தன்னோட பொண்ணைத் தர்றேன்னு சொல்றார்... நீ இன்னும் கம்பெனி எம்.டின்னு சொல்லிட்டிருக்கே...?''

''அம்மா...!''

''அவரை நீ தான் நம்ம வீட்டுக்கு வரச் சொன்னியா...?''

''உன்னைப் பார்க்கணும்ன்னு சொல்லிட்டிருந்தார்... ஞாயித்துக்கிழமை வாங்க... அம்மா வீட்ல இருப்பாங்கன்னு சொன்னேன்... இன்னிக்கு வந்துட்டார் போலிருக்கு! என்னம்மா சொன்னார்?''

''உன்னோட விலையைச் சொன்னார்...''

''........''

''உனக்கு அவர் போட்டிருக்கிற மதிப்பு எவ்வளவு தெரியுமா...? அம்பதாயிரம்... நான் தான் மனசு பொறுக்காமே - 'அய்யா... நீங்க செய்யறது அநியாயம்... எம் புள்ளையோட அழகைப் பாருங்க... படிப்பைப் பாருங்க... இன்னும் கொஞ்சம் பார்த்துப் போட்டுக் குடுங்க'ன்னு கெஞ்சி உன்னோட ரேட்டை ஒரு லட்ச ரூபாய்க்கு உயர்த்தி விட்டேன்...''

''அ ... ம்... மா!''

''என்னடா 'லொம்மா'ங்கிறே... பணக்கார வீட்டுப் பெண்... பெண்டாட்டியா கிடைக்கிறான்னு தெரிஞ்சதுமே... அம்மாக்காரி உனக்கு சுமையா போயிட்டாளா...?''

''அம்மா... நீ தப்பா புரிஞ்சுகிட்டே... அந்தப் பொண்ணு சுதா நம்ம வீட்டுக்கு வந்தா... உன்னை மதிக்கமாட்டாளோன்னு பயந்துதான்... நான் அது மாதிரி...''

''இதோ... பார்ரா...! யாரும் எனக்குப் பிச்சை போட வேண்டிய அவசியமேயில்லை. உனக்கு எட்டு வயசு... ரமாவுக்கு ஆறுவயசா இருந்த காலத்துல - உன்னோட அப்பா... எனக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ணினார்ங்கிற ஒரேயொரு காரணத்துக்காக உங்க ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டு வெளியே வந்தேன். அப்போ வசதியா இருந்த உன் மாமா அத்தை கிட்டே போகாமே - அவங்ககிட்டே ஒத்தை ரூபாயைக் கூட வாங்கிக்காமே... எதிர் நீச்சல் போட்டது நான். அதுக்கப்புறம் என்னைத் தேடிட்டு வந்த குபேர வாழ்க்கையைக் கூட வேண்டாம்ன்னு சொன்னது நான்... இன்னிக்கு உன்னோட வருங்கால மாமனார் - என்னோட சோத்துச் செலவுக்காக எம்பேர்ல பாங்க்ல பணம் போடப் போறாராம்... அதுக்கு நீயும் ஒப்புதல் குடுத்திருக்கே...''

''அம்மா...''

வீரேஷ் சிறிது கோபப்பட்ட குரலில் கூப்பிட்டான்:

''என்னடா...?''

''உன்னை அவமானப்படுத்தணும்ங்கிறதுக்காக அவர் அப்படி சொல்லலைம்மா... உன்னோட எதிர்கால வாழ்க்கைக்காக.. நல்லது பண்ண நினைச்சித்தான் சொல்லியிருக்கார். இதுல எந்தத் தப்பும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலைம்மா...''



''உனக்குத் தெரியாதுடா... உன்னோட கண்ணுக்கு இப்போ எதுவுமே தப்பா தெரியாது. ஏன்னா, உன்னோட கண்ணு ரெண்டையும் பணம் மறைச்சிருக்கு... உன்னோட மனசுல ஒரு பொண்ணு நுழைஞ்சிருக்கா... அவ என்னை மறக்கடிச்சிட்டா...''

''அம்மா...! வயசாயிட்டாலே.... புத்தி பேதலிச்சிப் போகும்ன்னு சொல்லுவாங்க... உன்னோட விஷயத்துல அது சரியாயிடிச்சு... எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சா அது உனக்கு சந்தோஷமில்லையாம்மா? நான் என்ன உன்னோட பொண்ணு மாதிரி... மதம் மாறியா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்...? எனக்குத் தன்னோட பெண்ணைத் தரப் போகிறவர் பணக்காரர் தான்... ஆனா மோசமானவரில்லை... இன்னும் ரெண்டு வருஷத்தில ரிடையராகப் போற உனக்கு நல்லது பண்ணணும்ங்கிற எண்ணத்துல உம்பேர்ல பேங்க்ல பணம் போடுறதா சொல்லியிருக்கார்...''

''டேய்...! உன்னோட தயவோ... உன் மாமனாரோட தயவோ எனக்கு என்னிக்குமே வேண்டாம்டா... அடுத்த வேளை சோத்துக்கு நான் கஷ்டப்படற நிலைமை வந்தா... அந்த நிமிஷமே உங்கம்மா உயிரோடு இருக்க மாட்டா...''

''நீ முடிவா என்னதாம்மா சொல்றே...?''

''உன்னோட கல்யாணத்துக்கு நான் வருவேன்... உன்னைப் பெத்த கடமைக்காக அட்சதையை வீசிட்டு அந்த நிமிஷமே நான் மண்டபத்தை விட்டு வெளியே வந்துடுவேன்.''

வீரேஷிடம் சொன்ன மாதிரியே -

செய்து காட்டினாள் காவ்யா.




மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்த என்னை வாசலில் எழுந்த கார் ஹார்ன் சத்தம் கலைத்தது. பேனாவை மூடி வைத்துவிட்டு எழுந்து போய் ஜன்னல் வழியாய் வாசலை எட்டிப் பார்த்தேன்.

ஒரு பியட் கார் நின்றிருக்க -

இந்த நாவலின் முன்னுரையில் நீங்கள் சந்தித்த மாணிக்கவேலுவும் நந்தகோபாலும் கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். விழா பேட்ச் மார்புகளில் தெரிந்தது.

என் மனைவி என்னைத் திட்டினாள்: ''விழாவுக்குக் கூப்பிட உங்க ப்ரெண்ட்ஸ் கூட வந்துட்டாங்க... நீங்க இன்னமும் ரெடியாகலை...''

''வந்தவங்களை உட்கார வெச்சுக் காப்பி குடு... நான் ட்ரஸ் பண்ணிட்டு வந்துடறேன்...''

சொல்லிக் கொண்டே பாத்ரூமுக்குள் நுழைந்து - முகத்தைப் பாலிஷாக்கி - கண்ணாடி முன் நின்று என் வணங்கா முடித் தலையைச் சீவி (சீப்பால்) - ப்ரஸ் செய்த ட்ரஸ்ஸுக்குள் நுழைந்து - வரவேற்பறைக்குள் தலையை

நீட்டிய போது - மாணிக்கவேலுவும் நந்தகோபாலும் காப்பி டம்ளர்களைக் காலி செய்து விட்டு வயிற்றைத் தடவிக் கொண்டிருந்தார்கள்.

''புறப்படலாமா?''

''ம்...''

மூன்று பேரும் நடந்து காருக்குப் போனோம். உள்ளே நிரம்பினோம். கார் நகர்ந்து வீட்டைத் தாண்டியபோது மாணிக்கவேலுவிடம் கேட்டேன்:

''விழா ஒரு மணி நேரம் நடக்குமா?''

''எப்படியும் ரெண்டு மணி நேரமாயிடும்...''

''விழா முடிந்ததும் அந்த அம்மாள் காவ்யாவை நான் ஒரு பத்து நிமிஷம் தனியா சந்திச்சுப் பேசணும்; முடியுமா...?''

''தாராளமா பேசலாம்... என்ன விஷயமா பேசப்போறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

நான் புன்னகைத்துவிட்டுச் சொன்னேன்:

''நீங்க ரெண்டு பேரும் இன்னிக்கு காலைல வந்து காவ்யாவோட கதையைச் சொன்னதும் நான் அதை நாவலா எழுதத் தீர்மானிச்சு எழுதவும் ஆரம்பிச்சுட்டேன்... ஏறக்குறைய கடைசி அத்தியாயத்துக்கு வந்துட்டேன். அதுல எனக்குச் சில சந்தேகங்கள்...''

''எங்ககிட்டேயே கேக்கலாமே...? தெரிஞ்சா சொல்றோம்!''

கார் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்க - நான் கேட்டேன்:

''துபாய்க்குப் போன ரமா அவங்க மதரைப் பார்க்க வரவேயில்லையா...?''

''ஊஹூம்... ஒரு தடவை கூட வரவேயில்லை...''

''கடிதப் போக்குவரத்து?''

''அதுவும் இல்லை...''

''மாமனார் வீட்டோடு இருந்த வீரேஷ் அம்மாவைப் பார்க்க வரலையா...?''

''ஆரம்பத்துல வந்திட்டிருந்தவர்... அப்புறம் போகப்போக - தன் அம்மாவைப் பார்க்க வர்றதையே நிறுத்திட்டார். பார்க்கப் போகக் கூடாதுங்கறது அவர் ஒய்ஃபோட கட்டளை...''

''காவ்யாவுக்கு அண்ணன் ஒருத்தர் சிவராமன்னு இருந்தாரே... அவர்கூட காவ்யாவைப் பார்க்க வரலையா...?''

மாணிக்கவேலு சிரித்தான்: ''உள்ளூர்ல இருந்தா தங்கச்சிக்கு உதவ வேண்டி வந்துருமோன்னு நினைச்சு... அவர் வடநாட்டுப் பக்கம் ட்ரான்ஸ்பர் வாங்கிட்டுப் போயிட்டார்.''

''அப்போ... காவ்யா... தனியாத்தான் இருக்காங்க...?''

''ஆமா...''

''ரிடையரான பிறகு அவருக்கு பிராவிடெண்ட் பணம் எவ்வளவு கிடைக்கும்...''

''சொற்பமாகத் தான் கிடைக்கும்...''

''ஏன்...?''

''ரெண்டு வருஷமாவே... காவ்யா ஹார்ட் பேஷண்ட் ஆயிட்டாங்க... வேலூர் ஹாஸ்பிட்டல்ல ரெண்டு மாசம் ட்ரீட்மெண்ட் எடுத்ததுல பிராவிடெண்ட் பணம் பூராவும் கரைஞ்சுப் போச்சு...''



''பென்ஷன் வருமா...?''

''இருக்கிற ஒரே ஆதரவு அந்தப் பென்ஷன் தான்... அதுவும் முதல் பென்ஷன் பணம் கைக்குக் கிடைக்க... ஆறுமாசமாயிடும்...''

''அதுவரைக்கும் அவங்க தினசரி வாழ்க்கைச் செலவுக்கு வேண்டிய பணத்துக்கு என்ன செய்வாங்க...?''

''அதையெல்லாம் யோசிச்சுப் பார்த்துட்டுத்தான் நாங்க ஒரு முடிவுக்கு வந்திருக்கோம் ராஜேஷ்...!''

''என்ன முடிவு...?''

''ஸ்கூல்ல நாங்க மொத்தம் பதினஞ்சு டீச்சர்ஸ் இருக்கோம்... தலைக்கு இருநூறு ரூபாய் போட்டு - மூவாயிரம் ரூபாயைச் சேர்த்து வெச்சிருக்கோம். விழாவில இது ஒரு சர்ப்ரைஸ் அயிட்டம். பணத்தை ஒரு தோல்பையில போட்டு - விழாவுக்குத் தலைமை தாங்குகிற சி.ஈ.ஓ., மிஸஸ் காவ்யா கிட்டே தரப்போறார்... பென்ஷன் பணம் வர்றவரைக்கும் அந்த மூவாயிரம் ரூபா அவங்களுக்கு ரொம்பவும் உதவியா இருக்குமே...''

நந்தகோபால் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கார் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தது. அரசாங்க மான்யத்தில் பள்ளிக்கூடம் ஆரோக்கியமாகவே இருந்தது. ஆபீஸ் கட்டிடத்திற்கு முன்புறத்தில் நான்கைந்து ஸ்கூட்டர்களும், இரண்டு கார்களும், ஒரு கல்வி இலாகா ஜீப்பும் தெரிந்தன. எங்களுடைய கார் அருகே போய் நின்று மௌனமானது.

இறங்கினோம்.

காத்திருந்த தலைமையாசிரியை - எனக்கு வணக்கம் சொல்ல - நான் அந்த வணக்கத்தைத் திருப்பிக் கொடுத்தேன். வராந்தாவில் நடந்தோம். தலைமையாசிரியை சொன்னார்:

''லாஸ்ட் மன்த் வந்த உங்க க்ரைம் நாவல் நல்லாயிருந்தது.''

''தேங்க்ஸ்...!''

''இப்ப என்ன நாவல் எழுதிட்டிருக்கீங்க...?''

''இறப்பதற்கு நேரமில்லை''

''தலைப்பு நல்லாயிருக்கு...''

அந்த சின்ன ஹாலுக்குள் நுழைந்தோம். வர்ண சலபன் பேப்பர்கள் ஹாலின் குறுக்கும் நெடுக்கும் ஓடியிருந்தன. சின்ன மேடையில் முக்கியஸ்தர்கள் உட்கார்ந்திருக்க - ஹாலில் ஒரு ஐம்பது பேர் நாற்காலிகளில் பரவியிருந்தார்கள். மேடையேறி நாற்காலியில் உட்கார்ந்தேன்.

அடுத்த ஐந்து நிமிஷத்தில் சி.ஈ.ஓ. வந்தார். அவரை மேடைக்கு நடுநாயகமாக உட்கார வைத்தார்கள்.

விழா தொடங்குவதற்கு ஒரு நிமிஷம் முன்பாக - அடுத்த அறைக்கு இரண்டு ஆசிரியைகள் போய்க் காவ்யாவைக் கூட்டிவந்தார்கள்.

நான் நடந்து வரும் காவ்யாவை ஏறிட்டேன்.

ஐம்பத்தி ஐந்து வயதின் தளர்ச்சி முகத்தில் தெரிந்தது. கழுத்திலிருந்த மாங்கல்யம் தெரியாதபடி - ஊதாநிற பட்டுப்புடவையின் தலைப்பு கழுத்தை மூடியிருந்தது. நாசியில் தொற்றியிருந்த மூக்குக் கண்ணாடியின் வழியே அந்த வயதிலும் கண்கள் அழகாய்த் தெரிந்தன.

எல்லோர்க்கும் வணக்கம் சொல்லிக் கொண்டே மேடையேறிய காவ்யாவை எனக்கு அறிமுகம் செய்தார்கள்.

''இவர் ராஜேஷ்குமார்... நீங்க சந்திக்க விரும்பின எழுத்தாளர்.''

காவ்யாவின் கண்கள் விரிந்தன.

''வணக்கம்...! இந்த ரெண்டு வருஷமாத்தான்... உங்க நாவல்களைப் படிக்கிறேன்... நீங்க எழுதற கொலைக்கதைகளை விட்டுட்டு சோஷியல் நாவல் மட்டும் படிப்பேன். ரீசண்டா உங்க சமூக நாவல் ஒண்ணு படிச்சேன். அப்பா, அம்மாவை உதாசீனப்படுத்தற ரெண்டு மகன்களைப் பத்தின நாவல்... முடிவு நல்லா பண்ணியிருந்தீங்க...''

''தாங்க்ஸ்...!''

கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் ''கடவுள் வணக்கம்'' என்று சொல்ல - கூட்டம் எழுந்து நின்றது.

கீச்சுக்குரலில் யாரோ ''இன்பவிநாயகனே!'' என்று பாடினார்கள். கடவுள் வணக்கம் முடிந்ததும் விழா நகர ஆரம்பித்தது. வரவேற்புரை - தலைவர் உரை - எல்லாவற்றிலுமே. காவ்யாவைப் பற்றிப் பேசினார்கள். காவ்யா பள்ளிக்காக உழைத்த உழைப்பு - அவளுடைய நேர்மை - வாழ்க்கையில் பட்ட கஷ்டங்கள் - இவற்றை நிமிஷக் கணக்கில் விவரித்தனர்.

நான் பேச அழைக்கப்பட்டேன்.

நான் மைக்கைப் பிடித்து - சம்பிரதாய வணக்கங்களைச் சொல்லி விட்டுப் பேச ஆரம்பித்தேன்: **''உங்கள் பள்ளியில் திருமதி காவ்யாவுக்காக நடத்தப்படும் இந்தப் பிரிவுபச்சாரக் கூட்டத்தில் நான் எதற்குமே ஒட்டாமல் உட்கார்ந்திருக்கிறேன். நான் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று காவ்யா அவர்கள் ஆசைப்பட்டிருக்கிறார்கள். அவருடைய அன்புக்கு என் நன்றி. காலையில் விழாவுக்கு என்னை அழைக்க வந்த நண்பர்கள், திருமதி காவ்யாவைப் பற்றி என்னிடம் சொன்னார்கள். அவருடைய வாழ்வில் நடந்த சில கறுப்பு தினங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாதோ... அந்த நிகழ்ச்சிகளெல்லாம் திருமதி காவ்யாவின் வாழ்க்கையில் நடந்துள்ளன. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒரு நாவல் வடிவத்தில் கொண்டு வர வேண்டுமென்ற ஆர்வத்தோடு - காவ்யா அவர்களின் அனுமதியில்லாமலேயே - நாவலை எழுத ஆரம்பித்து விட்டேன்... இந்த நாவல் வெளிவருமானால் - அது மற்ற பெண்களுக்கு ஒரு எச்சரிக்கைக் குரலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கருத்தை திருமதி காவ்யா மனதில் கொண்டு நாவல் வெளியே வர அனுமதிக்க வேண்டுகிறேன்.''**

ஹாலில் கைத்தட்டல் எழுந்தது.

நான் மேலும் சில நிமிஷங்களை செலவழித்து - காவ்யாவைப் பாராட்டிப் பேசி விட்டு உட்கார்ந்தேன்.

காவ்யா புன்னகைத்து -

''நாவலைக் கொண்டு வரலாம்'' என்று சொல்ல - ஹாலில் மறுபடியும் கரகோஷம் எழுந்தது. அதன் பிறகு டி.ஈ.ஓ... ஒரு பத்து நிமிஷம் சி.ஈ.ஓ.





பதினைந்து நிமிஷம் - பேசினார்கள்.

காவ்யா தன் நன்றியுரையைத் தொடங்குவதற்கு முன்பாக - மாணிக்கவேலு எழுந்து வந்தார். கையில் அந்த தோல்பை.

மேடையேறி மைக்கின் முன் நின்றார். பேச ஆரம்பித்தார்: ''பணியிலிருந்து விலகி ஓய்வு பெறப் போகும் திருமதி காவ்யா அவர்கள், ஆசிரிய - ஆசிரியைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தரப் போகிற இந்த அன்பளிப்பைப் பற்றி தவறாக எண்ணக் கூடாது. உங்களுக்குப் பென்ஷன் தொகை கிடைக்க எப்படியும் ஆறு மாதகாலம் ஆகும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு - நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தொகையைத் திரட்டித் தந்துள்ளோம். இந்தத் தொகையை மாவட்ட கல்வி முதன்மையாளர் அவர்கள் திருமதி காவ்யா அவர்களுக்கு வழங்க வேண்டுகிறோம்...''

ஹாலில் பலத்த கைத்தட்டல்.

மாணிக்கவேலு தோல் பையை - சி.ஈ.ஓ.விடம் தர - அவர் எழுந்து வாங்கிக் கொண்டு ''இந்த அன்பளிப்பை அளிப்பதில் நான் மட்டற்ற மகிழ்வு கொள்கிறேன்...''

சொல்லிக் கொண்டே காவ்யாவைத் திரும்பிப் பார்த்தார்.

காவ்யா அசையாமல் உட்கார்ந்து நேர் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் அருகே குனிந்து ''மேடம்..,'' என்றேன்.

அதே அசையாத உடம்போடு -

நேர் பார்வை.

தலைமையாசிரியை எழுந்து வந்து காவ்யாவின் தோளைத் தொட்டார்.

''காவ்யா... சீ.ஈ.ஓ. காத்திட்டிருக்கார்...'' சொல்லியபடி -

காவ்யாவை உசுப்ப - காவ்யாவின் தலை முன் பக்கமாய் ஸ்லோமோஷனில் சாய்ந்து - மேஜையின் விளிம்பில் 'த்தட்' டென்று முட்டிக் கொண்டு நின்றது.

மேடையிலிருந்து எல்லோருமே குபீரென்று எழ - ஹாலில் பதட்டக் குரல்கள், பய முகங்கள். யாரோ ஒருவர் பள்ளிக்கு எதிரேயிருந்த டாக்டர் ஒருவரைக் கூப்பிட ஓடினார்.

அடுத்த நிமிஷம் டாக்டர் வந்தார்.

மேஜையின் மேல் கவிழ்ந்து கிடந்த காவ்யாவைச் சோதித்தார். முகம் மாறிப் போய் நிமிர்ந்தார். ''ஸாரி டு ஸே திஸ்... ஹார்ட் அட்டாக்... உயிர் பிரிஞ்சு ரெண்டு நிமிஷமாகிறது...'' ○

முற்றும்.